இளசாக, மிருதுவாக, மென்மையாக...

ஒளிநகல் சிற்றிதழ்
குருத்து 2 | ஓலை 5

# குருத்தோலை

வளருவோர்க்கும் வளர்ந்தோர்க்கும்




“மெதுவாய் நீந்தி வரும்
கடல் ஆமைகள்போல்
நோயுற்றிருக்கும்
வயோதிபரையும்,
ஏழைகளையும்
இதமாய்த்
தடவிக் கொடுங்கள்!”

# 2020-ஐ நோக்கி...

டேவிட் தன்ராஜ்

இரண்டாயிரத்து இருபதை நோக்கி
இயேசுவின் அடிச்சுவடுகளில்
இடதுவலது என்று விலகாமல்
இனியப் பயணம் துவங்கிடுவோம்

சீர்திருத்த நாயகனாம் - இயேசுவின்
சீர்மிகுச் சீடர்களாய்
சேதாரம் சிறிதுமின்றி - இந்தியாவை
செதுக்குவோம் சத்தியத்தால்

மங்கியணையும் மனித நேயத்தை
மீண்டும் எரியச்செய்திட
மாறா கடவுளின் நற்செய்தியை
மானிடர்க்குப் பகிர்ந்தளிப்போம்

அறிவியலை ஆய்வு செய்திட
ஆவிக்குரியவன் சளைத்தவனல்ல
அரிய பல படைப்புகளை
அள்ளித்தருவோம் மானிடருக்காய்

ஆண்டவரை அறிந்துகொண்ட
ஆவிக்குரியத் தலைவர்கள்
அரசியலை அழகு செய்திட
ஆர்வமுடன் உழைத்திடுவோம்

திரைப்படத் தயாரிப்பாளர் - பலர்
திருச்சபையைத் தேடி வரும்
திறமைமிகு கலைஞர்களை
திருச்சபை வழங்கிடட்டும்

கால்டுவெல் போப்பைப் பின்பற்றி
கலையாகிய இலக்கியத்தை
கர்த்தரின் பாதங்களுக்கு - கருத்தாய்
காணிக்கை ஆக்கிடுவோம்

பெண்களை முடக்கி வைக்கும்
பொய்களைச் சுட்டெரிப்போம்
பெண்களும் இறைச் சாயலென்று
பெருமையுடன் தோள்கொடுப்போம்

ஊடுருவிய ஊடகத்தால் - உள்ளம்
ஊனமாகியச் சிறுவர்களை
உயிர் கொடுத்த இயேசுவிடம்
உண்மை வழி நடத்திடுவோம்

வாலிபர்களின் வளங்களை - சபை
வளாகத்தில் முடக்கிடாமல்
வாழ்வுதரும் பல்துறைகளில்
வளர்ந்து வர உதவிடுவோம்



**அளவுக்கு அதிகமான பொழுதுபோக்கு பொழப்பையே போக்கிவிடும்.**

- CRS Karan



# பொறுப்பாசிரியரிடமிருந்து...

குருத்தோலை வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள். 2020 எழுதுவதற்கும் அழகாய் இருக்கிறது. பார்ப்பதற்கும் அழகாய் இருக்கிறது. சொல்வதற்கும் அழகாய் இருக்கிறது. உங்களுக்கும் இந்த வருடம் சிறப்பான வருடமாக அமையட்டும்.

**புத்தாண்டைச் சிறப்பாக்குவதற்காக உங்களிடம் பத்துக் கேள்விகள்.**

1. கடவுள் மட்டுமே உங்கள் மகிழ்ச்சியாக இருக்கமுடியுமா? அப்படி இல்லையென்றால் நீங்கள் செய்யக்கூடிய ஒரு காரியம் என்ன?
2. இந்த வருடத்தில் நீங்கள் செய்யப்போகும் அசாத்யமான முயற்சி என்ன?
3. உங்கள் குடும்ப வாழ்க்கையை மேலும் சிறப்பானதாக்கிட நீங்கள் செய்யக்கூடியது என்ன?
4. எந்த தனிநபர் ஒழுக்கத்தில் இந்த வருடத்தில் வளர விரும்புகிறீர்கள்?
5. நீங்கள் அதிகமாக நேரத்தை வீணடிக்கும் காரியம் என்ன? எவ்வாறு அதிலிருந்து மீளப்போகிறீர்கள்?
6. இந்தச் சமுதாயத்தை உறுதிப்படுத்தும்படி இந்த வருடத்தில் நீங்கள் செய்யக்கூடியது என்ன?
7. எவ்விதமான அடிமைத்தனத்தில் இருக்கும் மக்களுக்காக நீங்கள் இந்த வருடத்தில் கரிசனையோடு செயல்படப்போகிறீர்கள்?
8. கடந்த வருடத்தைவிட இந்த வருடத்தை எவ்வாறு சிறப்பானதாக மாற்றப்போகிறீர்கள்?
9. உங்கள் தனிப்பட்ட தியான வாழ்க்கையை மேம்படுத்த நீங்கள் செய்யக்கூடிய ஒன்று என்ன?
10. ஒரு பத்து வருடங்களுக்கு பிறகு உங்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒன்றிற்காக இந்த வருடத்தில் நீங்கள் செய்யக்கூடியது என்ன?

ஒவ்வொரு கேள்விகளுக்கும் நீங்கள் ஒரு முடிவை எடுக்க வேண்டியது இல்லை. அனைத்து கேள்விகள் அடிப்படையில் உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான சில முடிவுகளை எடுங்கள். அவைகள் நிறைவேற இறையருளை நாடுங்கள்.

மீண்டும் சந்திப்போம்,

ஜெஸ்டின்.

# பேநாய்

பென்னி அலெக்ஸாண்டர்



எழுதுவதற்குப் பேனாவைப் பிடித்தது 8ஆம் வகுப்பில்தான். அதுவரை பென்சில் மட்டுமே. 80கள் வரை பேனா பெரும்பாலானவர்களுக்கு ஏக்கப்பட்டியலில்தான் இருந்தது. அந்தக்கால அபத்தங்களில் ஒன்று பேனாவில் எழுதினால், கையெழுத்து சரியாக வராது; ஆகவே, முதலில் பென்சிலில்தான் எழுதவேண்டும் என்பது. ரேடியோ, சைக்கிளுக்கெல்லாம் லைசன்ஸ் பெறவேண்டும் என்கிற சட்டம்கூட இந்த வகைதான். என்ன, பேனாவைத் தொடக்கூட லைசன்ஸ் வேண்டும் என்று இல்லாவிட்டாலும், அது (ஒரு) வயது வந்தோருக்கான பொருளாகவே முன்பு கருதப்பட்டது. முதலில் குச்சி எனப்படும் பல்ப்பம் சிலேட்டில், பின்பு கோடுபோட்ட தாளில் பென்சில், பின்பு போனால் போகிறதென்று ஆசிரியர்கள் பேனாவை அரைமனதோடு அனுமதிப்பர். அதுவும் பால்பாய்ண்ட் பேனாவைப் பார்த்தால் பல்லை நற நறக்கும் ஆசிரியர்கள் இருந்தார்கள். ஆனால், இப்படித்தான் ஒரு எழுத்தாளனின் பரிணாம வளர்ச்சி இருக்கவேண்டும் என்று நிர்பந்தம் இருந்தால் அதை யார் தடுக்க முடியும்?

ஆனால், காலங்கள் மாற, இந்தப் பத்தாம் பசலித்தனங்களுக்கு விடுதலை கிடைத்தது. ஆங்கில மீடியப் பள்ளிகள் எல்லாம் வந்தவுடன் அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் கிடைத்த சில சலுகைகளில் ஒன்றுதான் நோட்டு-பேனா. ஆரம்பப் பள்ளிகளிலேயே இன்று பேனாக்கள் இருப்பது சிறப்பு. ஆனால், எழுத்தாளர்கள் உருவாகிறார்களா என்பது வேறு விஷயம்.

அப்போது புதுப்பேனாக்களை வாங்குவது இப்போது மொபைல்போன் வாங்குவதுபோல. ஏற்கனவே கிறுக்கப்பட்ட காகிதங்களில் இடம் கண்டுபிடித்து கிறுக்கிப்பார்த்து வாங்கும் அனுபவம் புதுமையானது. வாங்கிய ஒருவாரம் மிகவும் மதிப்பாக உணர்வோம்.

ஒருகாலத்தில் பேனாக்களைச் சட்டைப்பைகளில் வைத்திருப்பது கௌரவமான ஒரு செயல். போஸ்ட் ஆஃபீஸ், பேங்க், இரயில் நிலையங்களில் சென்றால் ஒரு வகை படபடப்பு இரவலின்போது தொற்றிக்கொள்ளும். சிலநிமிடம் காணாமல் கிடைக்கும் சுகம்

அலாதி. மொத்தமாக காணாமல்போனால் சோகம் கவ்வும். இப்படிக் கலவையான உணர்வுகளை உண்டாக்கிக் கொண்டிருந்தன பேனாக்கள்.

பேனாவின் மீது இருக்கும் பைத்தியம் எழுதுபவர்களுக்கு மட்டுமானதல்ல. சும்மா பேனாவைப் பார்த்தவுடன் 'சுட்டு' வீட்டில் சேர்த்துவைத்திருக்கும் 'டிஸார்டர்', இரகசியமான ஆனால் துன்பமற்ற ஒரு வியாதி. இதுவும் சிலருக்கு உண்டு. அவர்கள் நம் அருகிலேயே இருப்பர். எப்படிப் பாதுகாத்தாலும், நம் பேனா நம்மிடம் சில நாட்களுக்குப் பின் தங்காது. எப்படி லவட்டுகிறார்கள் என்பதே புரியாது. பேனாவில் அடையாளம் இட்டிருந்தாலும் அவர்களுக்குக் கவலையே இல்லை. ஏனென்றால், அவற்றைப் பறிகொடுத்தவர்கள் இனி பார்க்கப்போவதுதான் இல்லையே!

ஒரு நண்பன் என்னிடம் சொல்லியேவிட்டான் ஒருமுறை, "எல, புதுப்பேனா எதையும் எங்கிட்ட காட்டீராத, கை அரிக்கும், அப்புறம் நா பழி இல்ல". ஒருமாதிரி அவனைப் பார்த்தபோது வீட்டில் சில நூறு பேனாக்களைச் சுட்டு வைத்திருப்பதாக அதிரவிட்டான். இப்படி பேனா உலகிலேயே அதிகம் திருடப்படும் பொருட்களாக இருப்பது எழுத்தாளர்களால் அல்ல. பேனாப்பிரியர்களெல்லாரும் எழுத்தாளர்களாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. நாணய சேகரிப்புபோல் பேனா ஒரு சேகரிப்புப் பொருள். அவ்வளவே.

இரவல் பேனா வாங்குவது சினேகிதத்தைச் சோதிப்பதற்கு ஒரு சரியான வழி. உற்ற நண்பனாக இருந்தாலும், நோட்டு புத்தகத்தைக் கூடத் தருவான்கள். பேனாவைக் கேட்டால், செம கடுப்பேறும். பேனா இல்லாவிட்டால், வகுப்பில் வெளியே அனுப்பப்படுவது உறுதி. பாண்டியராஜன் சார் (இவரைப்பற்றி பல கட்டுரை எழுதலாம்) ரைமிங்காகத் திட்டி வெளியே அனுப்புவார், "பேநாய் இல்லாமல் ஏன் நாய் வந்தாய், போ நாய் வெளியே!".

கம்ப்யூட்டர் காலத்தில் பேனாவின் பயன்பாடு சற்று குறைந்தாலும், இன்னும் ஓரிரு தலைமுறைகளுக்குத் தாங்கும் என்றுதான் தோன்றுகிறது. வெளிநாடுகளில் பள்ளிப் பிள்ளைகள் லேப்டாப், டேப்லட் பயன்படுத்தினாலும், முற்றிலும் பேனா பயன்பாட்டில் இருந்து அகன்றதாகத் தெரியவில்லை. நம் நாட்டில் அரசாங்கப் பள்ளிகள் இருக்கும் வரை பேனா இருக்கும்.

பேனாக்கள் பலவகை என்றாலும் இங்க் பேனாக்கள் ஒரு தனிவகை. எடுத்தோமா, எழுதினோமா டைப் இல்லை. அதை உபயோகிக்க தனிப் பொறுமை வேண்டும். பைக்கில் புல்லட் ஓட்டுவது (அந்தக் காலத்தில்) எப்படி எளிதில்லையோ அதேபோல, மைப்பேனாக்கள் ஒருவித ஆர்ட் வகை. பேனாவுடன் வரும் நிப் எனப்படும் நுனிப்பகுதி அக்கப்போர் பிடித்தது. மை ஊற்றுவது என்பது ஒரு தனிக் கலை. அதுவும் ஃபில்லர் இல்லாமல் மைக்கூட்டைச் சாய்த்து சன்னமாக ஊற்றுவது ஒரு திரில் அனுபவம். ஃபில்லர் இல்லாத நேரங்களில், கையில் மை சிந்தாமல் ஊற்றுபவர் சாகசக்காரர். மாணவ சமுதாயத்தில் அவர் மதிக்கத்தகுந்தவர். பக்கம் பக்கமாகப் பெரிய பரிட்சை எழுத வேண்டுமானால், கூடவே இன்னொரு பேனாவும் எடுத்துச் சென்றே ஆகவேண்டும். மறந்தால் பரிட்சை பணால்தான்.

இப்படிப் பல இன்னல்கள் ஊடே படித்துக்கொண்டிருந்த மாணவர்களுக்கு உதவியாக வந்தார் ரெனால்ட்ஸ். பல பள்ளி மாணவர்களைபோல யூனிஃபார்மில் இருப்பார். ஆனால், வெள்ளைப் பேண்ட், ஊதாச் சட்டை என்று. அதுவரை மைப்பேனாவில்தான் எழுதவேண்டும் என்கிற சட்டத்தை மாற்ற வந்த புண்ணியவாளன் இந்த 'ரெனால்ட்ஸ்'. இரு வருடங்கள்முன் மூடப்பட்டாலும், இன்றும் மக்கள் மறக்காத பெயராக இருந்த ரெனால்ட்ஸ் வெறும் எழுத்தாளர்களை மட்டுமல்ல, பல அரசு அலுவலர்களையும் மகிழ்வித்திருக்கும். சிவப்பு, ஊதா நிறங்களில் சார்மார்களும், கூடவே பச்சை ஒன்றை 'ஹெட்மாஸ்டர்''களும் வைத்திருந்தனர்.

பள்ளியில் நடந்த சம்பவம் இது. ஒன்பதாம் வகுப்பு ஆ பிரிவு. பக்கத்தில் இருந்த நண்பன் கிஸ்னா. எரிச்சலைக் கிளப்புவதில் மன்னன். நக்கல் சிரிப்பிலேயே பல விரோதிகளை உண்டு பண்ணியிருந்தான். நான் எப்படியோ தாக்குப் பிடிக்கக் காரணம், ஜஸ்ட் அடுத்த வீட்டில் இருந்தான். ஒருநாள் அவன் எதையோ சொல்லி வெறுப்பேற்ற



பால்பாய்ன்ட் பேனாவால் குத்திவிட்டேன். காலில் ஒரு சிறு ஓட்டை, ஆனால் இரத்தம் வரவில்லை. கடவுள் கிருபை. இந்தக் கோபச்செயலை நினைத்து பல வருடங்கள் அப்புறம் வருந்தியிருக்கிறேன். கிஸ்னாவிடம் கூட ஒருமுறை மன்னிப்புக் கேட்டதாக ஞாபகம். ஆனால், இந்த மாதிரி வயலன்ஸுக்கு வகுப்பு அளவில் தண்டனை கிடையாது. உடனடி அப்பீல்தான். டீச்சர் இரண்டு சாத்து சாத்தி, உடனடியாக தலைமையாசிரியரைப் பார்க்க அனுப்பிவிடுவார். எனவே நானும், 'முறைப்படி' தலைமையாசிரியரிடம் அனுப்பப்பட்டேன்.

அப்போது எங்கள் தலைமையாசிரியர், திரு. இருதயராஜ், அந்த ஏரியாவில் மிகப் பிரபலம். மிகவும் கண்டிப்பு. சாட்டைக் கம்பும், சிவந்த கண்களும்தான் அடையாளம். அவர் அந்தப் பக்கம் வருகிறார் என்றாலே, இந்தப் பக்கம் இருக்கும் பயல்களும் காணாமல் போவார்கள். கையில் சிக்கினால் 'உரி'தான்! முன்பே பள்ளித்தென்னந்தோப்பில் சில பயல்கள் மரம் ஏறியதை அவரே கையும் மெய்யுமாகப் பிடித்ததால் நொறுக்கிவிட்டது ஞாபத்துக்கு வந்துபோனது. இவர் பல வருடம் ஹெட்மாஸ்டராக இருந்ததால், நான் பத்துவருடம் முன் படித்த எட்வர்ட் மாமாவும், பல சம்பவங்களைப் பகிர்ந்திருக்கிறோம். இருதயராஜ் சார் பற்றியும் ஒரு புத்தகம் எழுதும் அளவு நினைவுகள் உண்டு.

இப்போது என் முறை. வாசலில், நான் மற்றும் கிஸ்னா. பியூன் உள்ளே அழைக்கிறார். தொண்டைக் குழியில் எச்சில் இறங்கவில்லை. லேசாக அழுகையும் வந்தது. அப்போதுதான்



மதியச் சாப்பாட்டுக்குப் பின் தினமலரைப் பிரித்துக் கொண்டிருந்தார் சார்வாள். என் ‘முகரையை’ நன்றாகத் தெரியும். அடிப்பதற்கு முன் திட்ட ஆரம்பித்தால் அவரிடம் இருந்து வரும் வார்த்தைகள், “மோரையப்பாரு.. மோரைய!”.

என் தகப்பனாரும் ஆசிரியர், ஒரே சர்ச், இருவருக்கும் நீண்டகாலப் பழக்கம். ஆனால், இதெல்லாம் அவரிடம் செல்லுபடியாகாது என்று தெரியும். மெதுவாக பின்னால் சாய்த்து வைக்கப்பட்டிருந்த கம்பை எடுத்தார். ஒன்றும் சொல்லவில்லை. முறைத்தார். கிஸ்னா டவுசரை சற்றே உயர்த்திக் காலை காட்டினான். இரண்டு கையிலும் கம்பை எடுத்து இரண்டு வெளு! இந்த மாதிரிச் சோலிக்கெல்லாம், அடுத்து அவர் வாயில் இருந்து நிச்சயம் வரும் வார்த்தைகள், “உங்கய்யாவ வந்து நாளக்கிப் பாக்கச் சொல்லுல!”.

அப்பாவிடம் வேற சாத்து வாங்கவேண்டும் என்பதை நினைத்தால் அப்போதே கிறுகிறுத்தது. ஆனால், என்ன ஆச்சரியம். வரவில்லை அந்த வார்த்தைகள். இதை நான் எதிர்பார்க்கவே இல்லை.

“போல வெளியே!”, என்பதுபோலப் பார்த்தார். சட்டென்று திரும்பிவிட்டேன்.

அப்புறம் வந்த சந்தோஷத்தை அது வெளியே வந்தது தெரியாமல் வெளியே வந்தேன். கிஸ்னாவுக்குப் பயங்கர அதிருப்தி. குத்தைவிட இப்போது வலித்திருக்கவேண்டும் இந்த ஏமாற்றம். அதன்பின் இரண்டு வாரம் வரை பேச்சுக்கள் கிடையாது. பிறகு எப்படியோ பேசத்துவங்கினோம். சிலகாலத்தில், குத்தை மறந்து நக்கலையும் துவங்கினான். உடன் பிறந்ததுல்லா!

சுமார், பதினைந்து வருட தேடலுக்குப் பிறகு, மூணாறில் ஒரு பிரபல மருத்துவ மனையில் அவனைக் கண்டுபிடித்தேன். டாக்டராகியிருந்தான். வீட்டுக்கு இரவுக்குப் போனோம். உணவுக்குப் பின் வீட்டாள்கள் பேசிக்கொண்டிருந்தனர். நான், ‘கெளம்புறம்ல..” என்று காரைக் கிளப்பி பிரியாவிடை பெறத் தயார் ஆனேன். இவன், மெதுவாக என் காதில் கிசுகிசுத்தான். “மக்கா, பள்ளிக்கூடத்துல என்னயக் குத்தினயே, ஞாவகம் இருக்காடே? .. இந்தா பாரு என்றான்.

முட்டிக்குமேல், சின்னதாகக் கறுப்பில் தழும்பு!



# குப்பை

✍ வில்பர்ட் C துரை

சரி.... நாம இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவோம்... எத்தனை நாள்தான் புலனாய்வு அறிக்கைகளையே படிக்கிறது? சும்மா இருந்தா படிங்க. அப்படி ஒன்னும் முக்கியமான செய்தி இல்ல.

காலை 10 மணி இருக்கும். மாநகரப் பேருந்தில் சென்று கொண்டிருந்தேன். திடீரென்று குப்பென்று ஒரு கெட்டவாடை. எங்கே நமக்கு மட்டும் தானோவென்று சுற்றிப் பார்த்தேன். எல்லோருடைய முகமும் அஷ்டகோணலாகத்தான் இருந்தது. திருப்திப்பட்டுக்கொண்டேன். கண்டிப்பாக நம்மிடமிருந்து வரவில்லையென்று உறுதி செய்து கொண்டேன். சுற்றியுள்ளவர்களையும் ஒரு சுற்று பார்த்துவிட்டு மற்றவர்களைப் போலவே முகத்தைச் சுளிக்கும் ஒரு பாவனை செய்துவிட்டேன்.

எதற்கு இந்தப் பாவனை? நாம் மற்றவர்களை ஒரு நோக்கத்தோடு பார்த்தோமே, அந்த வாடையின் மூலம் எங்கே என்றறிய. அதே நோக்கில் வேறெவரும் நம்மைப் பார்த்து விடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையோடு கூடிய நடிப்பு அது. அது இயல்பாகவே வந்து விடுகிறது. கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் அது தொடர்ந்து வந்தது. ஆனால் மூலத்தை அறியும் முயற்சி தோல்வியில் முடிவுற்றது.

மாலை ஒரு 8 மணி இருக்கும். மீண்டும் அதே கெட்டவாடை. எங்கேயோ பரிச்சயப்பட்ட வாடையாயிற்றே. ஆம், காலை பரிச்சயமான அதே வாடைதான். இப்போதும் சுய கௌரவத்தைக் காப்பாற்றும் படியாய், முகத்தை அஷ்டகோணலாக்கிக் கொண்டு சுற்றிலும் திருதிருவென சுழன்று முதற்கடமையை முடித்தாயிற்று. ஆனால் இப்போது மூலம் கண்களில் தென்பட்டு விட்டது. மாநகராட்சிக் குப்பைகளைக் கிடங்கிற்குக் கொண்டு செல்லும் தானே தூக்கித் தட்டும் ராட்சத வாகனம் அது. ஜோராக சலசலவென்று குற்றால அருவிபோல சாலையெங்கும் அபிஷேகம் செய்துவிட்டு அந்த மணம் பரப்பும் வேலையைச் செவ்வனே செய்துகொண்டு போய்க்கொண்டிருந்தது.

ஆஹா... கண்டுபிடித்தாயிற்று. அதற்குள்ளாக இம்மாநகரத்தை மனதிற்குள் சபிக்கவும் தொடங்கியாயிற்று. மக்கள் நெருக்கம் மிகுந்த முக்கிய நகரங்களில் குறைந்தபட்சம் நள்ளிரவு நேரங்களில் இதைச் செய்யலாம். நடைமுறைச் சிக்கல்கள் உண்டுதான். ஆனாலும் அவற்றைக் களைவதுதானே மேலாண்மை?

இது ஒருபுறம் இருக்க, சிலதினங்களுக்கு முன்பாக பழைய மாதாந்திர பத்திரிக்கைகள்

சிலவற்றைப் புரட்டிக் கொண்டிருந்தபோது கண்ணில் பட்டது அந்தக் கட்டுரை.

நாம் (ஒருவேளை நான்) சற்றேனும் யோசித்திருக்க முடியாத ஒரு கூட்டமக்கள் நம்மோடு இருக்கிறார்கள். இவர்களும் நம்மைப் போன்றே இரத்தமும் சதையும் சிந்தையும் கொண்ட மனிதர்கள்தானே என்று நினைக்கும்போது இதயம் கனக்கிறது. குப்பை பொறுக்கும் நபர்களைப் பார்த்திருக்கிறோம். ஆனால் ஒரு குடும்பமே, சமுதாயமே, மக்கள் கூட்டமே இவர்கள் பின்னிருக்கிறது என்பதை யோசித்திருக்கவில்லை.

மாநகராட்சிக் குப்பைக் கிடங்கிற்குக் காலையிலேயே வேலைக்குக் குடும்பமாக வந்துவிடும் இவர்கள் கையில், ஒரே ஒரு குச்சியை மட்டும் வைத்துக் கொண்டு குப்பைகளைக் கிளறி, அதில் தேவையான பிளாஸ்டிக், இரும்பு, தகரம், பாட்டில்கள் போன்றவற்றைப் பொறுக்கி பணமாக்குவார்களாம். இந்த மக்கள் கூட்டமே இந்த வேலை தவிர வேறொன்றும் அறியாதவர்களாம். ஒரு குப்பைக் கிடங்கைச் சார்ந்து ஆயிரக்கணக்கானோர், இல்லை இல்லை ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்கின்றனவாம். அவ்வாறு பொறுக்கும்போது விலையுயர்ந்த பொருட்களும், பணமும் சிலசமயங்களில் கிடைக்குமாம். அப்படிக் கிடைத்த ஒரு குடும்பம் இப்போதெல்லாம் காரில் அந்தக் குப்பை மேட்டைக் கடக்கிறதாம். தொழிலுக்கு வருகிறதில்லையாம்.

கிடைக்கும் உணவுப் பொருட்களை யெல்லாம் சாப்பிடுவார்களாம். “அப்படிச் சாப்பிட்டா நோய் வரும்ன்னு சொல்றாங்க சார்... அதெல்லாம் சுத்த பொய் சார்... எனக்கெல்லாம் ஒருநாள் கூடஒன்னும் ஆனதில்லை...” குப்பை மனிதரின் பகீர் வாக்குமூலம்.



பொக்லைன் இயந்திரங்கள் மூலம் குப்பைகளைச் சமப்படுத்தும்போது அருகில் நின்று பொறுக்குவார்களாம். அப்போதெல்லாம் இயந்திரத்தில் சிக்கி, கை கால் இழந்து, உயிரிழந்தவர்கள்கூட உண்டு என்கிறார் அவர். தொழிலுக்குப் புதியவர்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதுண்டாம்.

இரத்தமும் சதையுமாய்க் கழிவுகளோடு பைகள் இருக்கும். எங்களுக்கு அதெல்லாம் அருவருப்பு கிடையாது. அவற்றைப் பிரித்து, தேங்கிக் கிடக்கும் நீரில் அலசி கடைகளில் கொடுத்து காசாக்கி விடுவோம் சார். சிறியவர்கள் முதல் வயதானவர்கள் வரை இந்த வேலை செய்கிறார்கள் இவர்கள்.

“திடீல்னு குப்பைக் கிடங்க இயித்து மூடிருவாங்க சார். நாங்க சாப்பாட்டுக்கு எங்க சார் போவோம்? அப்புறம் வேற குப்பக்கெடங்க தேடிப் போவோம். ஆனா அங்க ஏற்கெனவே பொறுக்குறவங்ககூட சண்ட வரும். ரொம்ப கஷ்டம் சார் எங்க வாழ்க்க”

இவர்களையும் மனதில் வைத்து அரசு செயல்பட வேண்டும். ஓரளவு திட்டங்கள் இருந்தாலும் அவைகள் சரியான விதத்தில் போய்ச் சேரவில்லை என்பதும் உண்மை. நம்முடைய கண்களுக்கே இவர்களெல்லாம் அனேக நேரங்களில் தெரிவதில்லை சக மனிதர்களாய். குளிரூட்டப்பட்ட, திரை மறைக்கப்பட்ட வாகனங்களில் செல்லும் திட்டமிடும் நிலையில் உள்ளவர்கள் பார்வை எப்போது இவர்களின் மீது படுமோ?



# மாறிப் போனவைகள் – 5

✍ கார்த்திகா ராஜ்குமார்

ஸ்டார் ஹவுஸ்க்கு உதகை நகர்ப் பகுதியிலிருந்து போக மூன்று வழிகள் உண்டென்று நான் பள்ளிப்பருவத்தில் இருந்த நாட்களில் வகுப்பில் பசங்கள் சொல்வதுண்டு. கல் பங்களா இருக்கும் பழைய உதகையினூடாகப் பேரிக்காய் தோட்டங்கள் வழியாக போகிற நெட்டுக்குத்து மேட்டின் ரகசிய குறுக்கு குறுகிய பாதையில் அது போகிறது. பள்ளியில் இருக்கிற பெரிய பசங்களை அந்த வழியாக அழைத்துப் போனதாய் அவர்களின் ஆசிரியராக இருந்த என் அப்பா சொல்லி இருக்கிறார்.

தோட்டங்களைத் தாண்டியதும் இருக்கிற காடுகளினுள் ஒளிந்திருக்கும் பாதையை எப்படி இனம் கண்டு பசங்களை கூட்டிப் போவார் என்பது புதிராகவே இருக்குமெனக்கு. அண்ணாந்து பார்த்து எதிரில் இருக்கிற அந்த மரங்களடர்ந்த மலையைக் கடந்தா என்றெல்லாம் வருகிற கேள்விகளுக்குப் புன்னகையும், நீ சின்ன பையன் நடக்க முடியாது, ஒரு நாளில் போகலாம் என்ற பதிலுமே இருந்திருக்கிறது. ஸ்டார் ஹவுஸ்-ஐ போய்பார்க்க விரும்பினதற்கு இதுவும் ஒரு காரணம்.

இன்னொரு வழி தலையாட்டிமந்து வழியாக கோரி சோலை வழியாக கோரியில் இருக்கிற தர்காவைக் கடந்து போகிற வழி. அந்த முஸ்லீம் தர்கா பற்றி உலவி வந்த சுவாரசியமான தகவல்கள் ஏராளம். பல கதைகள், சரித்திரங்களைச் சொல்வார்கள். ஹசரத் பீர் சயீத் என்ற ஆரம்பிக்கிற மரியாதைக்குரியவரின் தர்காவிற்கு அருகில் பெரிய நீர்த்தேக்கம் இருந்தது. அந்த வழியாகவாவது



ஒருமுறை யாருடனாவது போய் ஸ்டார் ஹவுஸ் இருக்கிற தொட்டபெட்டாவை, நீலகிரி மலைத்தொடரின் சிகரத்தை பார்க்கவேண்டுமென்று அந்த நாட்களில் கனவுகள் இருந்தன, நிறைவேறாமலேயே.

இந்த தருணத்தில்தான் எட்டாவது படிக்கையில் என் நண்பன் லோகு எந்த ஒரு பெரியவர்களின் துணையும், வழிகாட்டலும் இல்லாமலேயே ஸ்டார் ஹவுஸ்க்கு கூட்டிப் போகட்டுமா என்றபோது அசந்து போனேன்.

அதுவும் கேள்விப்பட்டும், கற்பனைத்துமிருந்த இந்த இரு வழிகளில்லாமல் அவன் வீடு இருந்த கோடப்பமந்து வழியாக கூட்டிப் போகிறான் என்றதும் பிரமிப்பாக இருந்தது. அம்மாவிடம்கூட முழு உண்மையையும் சொல்லாமல் திட்டம் தீட்டப்பட்டது. என்னோடு ஊரிலிருந்த வந்திருந்த எங்கள் வயதுகளிலிருந்த என் அத்தை மகன் சாமியும் இந்தச் சாகசப் பயணத்தில் எவரும் அறியாவண்ணம் உடன் வர ஒப்புக்கொண்டான். காலையிலேயே கிளம்பி விட்டோம்.

அவன் கூட்டிப் போகப்போகிற வழி பற்றி ஏதும் அறியாமலிருந்தது ஆர்வத்தை இன்னும் கூட்டியது. அவன் வீட்டுத் தோட்டத்தில் இருக்கிற தெள்ளத்தெளிவான பளிங்குநீர் போல இருக்கும் ஊற்று பற்றி சிலாகித்து விட்டு அந்தத் தண்ணீரை எடுத்துக்கொண்டு கிளம்பினோம்.

கொஞ்சம் குறைய இந்தப் பதிவில் உள்ள படங்களைப்போலதான் எங்கள் பாதை இருந்ததென்று சொல்வேன். நெடுந்துயர்ந்த விதவித மரங்கள் சுற்றிலுமிருக்க பாதை மேலேறிக் கொண்டே இருந்தது... முடிவின்றி. சில பறவைகளின் கத்தல்கள் ஒலித்திருக்க விதவித வாசனைகள் இடத்தை பொறுத்து மாறிக்கொண்டிருந்ததை நாங்கள் திகைப்புடன் உள் வாங்கிக் கொண்டிருந்தோம்.

மரங்களைப் பற்றி பேசிக்கொன்டே இருந்தான் லோகு. அந்தச் சோலா காட்டு மரங்களினூடான பாதை மிகவும் ரகசியங்களை உள்ளடக்கியதாக இருந்தது. மரமேறும் சாகச வித்தைகளைச் சொல்லியும், அவன் மட்டும் அறிந்திருக்கிற





விக்கிப் பழ மரங்களின் பழங்களை, இன்னும் குரங்குப் பழ மரங்கள் இன்னும் இவ்விதம் அடுக்கியபடி வேறு ஏதோ ஒரு உலகத்திற்குக் கூட்டிப்போவதைப்போல நடத்திக் கொண்டிருந்தான் லோகு.

பசி மறந்து, எல்லாம் மறந்து நடந்து கொண்டிருக்கையில் மரங்களினூடாக இருந்த பாதை ஒரு தார் பாதையில் முடிய எங்களுக்கு எதுவும் புரியவில்லை.

“அதோ பார்” என்று அவன் சொன்னதும் பார்க்க கொஞ்சம் தள்ளி ஸ்டார் ஹவுஸ். யாருமற்ற தனிமையில் இருந்தது. மேலேறிப் போய் நின்றதும் சுற்றிலும் தென்பட்ட மலை முகப்புகள் பச்சையாயும் கருமையாயும் அசத்திக் கொண்டிருந்தன. அங்கிருந்து சற்று கீழிறங்கு சரிவு பாதை ஒரு ஊற்றுக்கு கூட்டிப்போகுமென்று மறுபடி தன் வர்ணனையைத் துவங்கினான். கால்களின் வலி அப்போதுதான் கெஞ்ச ஆரம்பித்தது.

சமீபத்தில் எங்கள் வீட்டிற்கு வந்த ஒருவர் காரில் ஸ்டார் ஹவுஸ் போய்விட்டு வந்து “என்னங்க என்னமோன்னு நினைச்சுதான் போனோம், மேகம்வேற நிறைய. செம மொக்கை. வெறும் ஆளுங்கதான். இத பாக்கறதுக்கா இத்தன கூட்டம்னு ஆயிடுச்சு” என்று சலித்துக் கொண்டபொழுது மனதிற்குச் சங்கடமாக இருந்தது. கால்வலித்தாலும் மனதுள் இனித்த எங்கள் அனுபவங்கள் மனதுள் வந்தன. பின்பு நாங்கள் வந்த வழிகள் பற்றி நண்பரிடம் கேட்டபொழுது அந்த வழியிருக்கும் சோலைகள் அழிக்கப்பட்டு விட்டதாக சொன்னார்.

எங்களைப் புது உலகத்தின் பரவசத்திற்குள் அமிழ்த்தின இடங்களில் கட்டிடங்கள் விதவிதமாய். ஒருவகையில் சொல்வதென்றால் உதகை நகரின் எல்லைகளுக்குள் இருந்த அற்புதமான வனப்பகுதிகள் கற்பழிக்கப்பட்டுவிட்டன. எங்கிருந்தோ வந்த முகமறியா சிலரின் சுயநல ஆசைகளுக்குள் அவை காணாமல் போய்விட்டன. வரப் போகிற இன்றைய தலைமுறைக்கு மரங்கள் சிரித்திருக்கிற மலைகளும் காடுகளின் பாதைகளில் பொதிந்திருக்கிற ரகசியமும், அந்த நடைப் பயணங்களின் மாயாஜாலம் போன்ற தருணங்களும் இவர்கள் வீடியோக்களில் பீசா சாப்பிட்டுக் கொண்டு வியக்கிறதொன்றாகப் போனதுதான் சோகம்.

திரைப்பட விமர்சனம்




ஜெஸ்வின்

நான் முதலாவது ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். பின்வரும் வரிகளில் நீங்கள் வாசிக்கப்போவது இறையியல் அல்ல. உங்களுக்கு இறையியல்தான் வேண்டுமென்றால் ஒரு இறையியல் புத்தகம் வாங்கி வாசிக்கலாம். இல்லை என்றால் ஒரு இறையியல் கல்லூரியில் போய் சேரலாம். ஏனென்றால் இந்தப் படத்தை குறித்த விமர்சனம் எழுதிய பலரும் (ஆங்கிலத்தில்தான்) தங்கள் இறையியலை இந்தப் படத்தில் தேடினதால் பெரும் குழப்பத்திற்கு ஆளானதைப் பார்க்க முடிகிறது. நீங்கள் இறையியல் கற்றுக்கொள்ள விரும்பி இந்தப் படத்தை பார்க்க விரும்பினாலும் உங்களுக்கும் மேல் சொன்ன அதே பதில்தான். ஏனென்றால் கடவுளை நம்பும் எவருக்கும் கடவுளைப் பார்க்க ஆசை இருக்கவே செய்யும்.

அந்தக் கடவுளை இந்தப் படத்தில் தேடினால் அவர் கிடைக்க மாட்டார். அவர் நடிக்கவும் மாட்டார். படத்துக்கு கால்ஷீட் கொடுக்கவும் மாட்டார். பைபிள் வாசியுங்கள்.

சரி விஷயத்துக்கு வருவோம். The Shack படத்தினுடைய ஒன்லைன் இதுதான். வாழ்க்கையில் ஒரு கடும் துன்பத்தை அனுபவித்து அதை அனுமதித்த கடவுள்மேல் கடும் கோபத்துடன் இருக்கும் ஒரு மனிதன் அவரைச் சந்தித்தால்...

The Shack முதலில் நாவலாக வந்தது. பின்னர் அந்த நாவல் படமாக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் படத்தின் கதாநாயகன் ஒரு சிறந்த வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருக்கிறார். அன்பான மனைவி, அருமையாய் மூன்று பிள்ளைகள், அழகான வீடு, ஆராதிக்க அருகில் ஆலயம். கடவுளைக்குறித்த பார்வையில் அவருக்கும் அவர் மனைவிக்கும் இடையில் மாற்றுக்கருத்துகள் இருந்தாலும் எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாத ஒரு நபர்.

அமைதியாகப் போய்க்கொண்டிருந்த அவர் வாழ்கையில் ஒரு பெருந்துன்பம் இடியாக வந்து இறங்குகிறது. அந்தத் துன்பத்தை அவர் கையாள இயலாத நிலையில் குடும்பமே சீர்குலைகிறது. வாழ்க்கையையே வெறுத்து கிடக்கின்ற நிலையில் கடவுள் தன்னை சந்திக்க வருமாறு அழைப்பு விடுக்கிறார். அவர் எப்படிக் கடவுளைச் சந்திக்கிறார்? அப்படிச் சந்திக்கும்போது என்ன நடக்கிறது என்பதைத்தான் இயக்குனர் காட்சிப்படுத்தியுள்ளார்.

இது ஒரு கிறிஸ்தவ பின்னணியில் அமைந்த படம். வேதாகமம் சொல்கிற



கடவுளையே கடவுள் என்று படம் காட்டுகிறது. ஆனால் படத்தின் பேசுபொருள் கடவுள் அல்ல. இந்தப் படத்தை எதிர்மறையாக விமர்சனம் செய்யும் பலரும் இன்றைய கிறிஸ்தவம் செய்யும் ஒரு பெரிய தவறைச் செய்கின்றனர். ஒரு வசனத்தின் சூழமைவை ஒதுக்கிவிட்டு வசனத்தை மட்டும் எடுத்து அதை வியாக்யானம் செய்ய முயல்வதைப்போலவே, இந்தப் படத்தின் சூழமைவைப் புரிந்துகொள்ளாமல் கடவுள் ஆணா பெண்ணா என்று விவாதம் செய்து கொண்டிருக்கின்றனர்.

காலம் காலமாக சிந்தனையாளர்களால் கேட்கப்பட்டுக்கொண்டுவரும் மிக முக்கியமான ஒரு கேள்விக்குப் படம் விடை சொல்ல முயல்கிறது. அந்த முயற்சியில் இயக்குனர் பெருமளவு வெற்றிபெற்றிருக்கிறார் என்றே கருதுகிறேன். கடவுள் நல்லவரானால் அவர் படைத்த உலகில் தீமையை எப்படி அனுமதிப்பார்? கடவுள் சர்வ வல்லவரானால் தான் நேசிக்கும் நபர்களின் வாழ்க்கையில் எப்படி அவரால் தீமையை அனுமதிக்க முடிகிறது? தீமையின் நோக்கம்தான் என்ன? Why suffering? இந்த கேள்விக்குத்தான் படம் விடைகொடுக்க முயல்கிறது. இந்தக் கேள்வியை ஒரு இடத்தில் கதாநாயகன் கடவுளிடமே நேரடியாகக் கேட்கிறார்.

பல்வேறு நுணுக்கமான உண்மைகளைப் படம் போகிறபோக்கில் அசாத்யமாக இயக்குனர் கையாள்கிறார். இந்தப் படத்தின் பலமும் அதுதான். இந்தப் படத்தின் பலவீனமும் அதுதான். மேம்போக்கான இறையியல் அறிவுடைய, வேதாகமத்தை நுனிப்புல் மேய்கிறவர்களுக்கு இந்தப் படம் புரியாமல் போவதற்கான காரணமும் அதுதான். ஒன்றை மட்டும் சொல்கிறேன். ஒரு இடத்தில் கடவுள் தகப்பனுக்குரிய கண்டிப்புடன் கதாநாயகனை ஒன்று செய்யச் சொல்கிறார். கதாநாயகனோ இல்லை, இல்லை என்னால் கண்டிப்பாக அதை மட்டும் செய்யவே முடியாது என்று மறுக்கிறார். கடவுள் விடுவதாக இல்லை. அங்கேயே உட்கார்ந்து கொள்கிறார். நீ இதைச் செய்யாவிட்டால்

இந்த இடத்தை விட்டு நான் நகர்வதாக இல்லை என்கிறார். வேறு வழியில்லாமல் கதாநாயகனும் கடவுள் சொன்னதைச் செய்கிறார். செய்துவிட்டு கடவுளைக் கேள்வியோடு பார்க்கிறார். ஒன்றும் மாறவில்லையே? என்று கேட்கிறார். கடவுள் சிரித்துக்கொண்டே "மகனே, மாற்றம் வருவதற்கு நீ இதை 1000 முறை செய்ய வேண்டியது இருக்கும். இப்போது இது போதும், போகலாம்" என்கிறார்.

நாங்கள் படம் பார்த்துக்கொண்டிருக்கும்போது நண்பர் மைக்யெல் அருமையாக ஒன்றைச் சொன்னார். ஒரு கதையைக் காட்சிப்படுத்துவதே கடினம். இயக்குனர் இறையியலைக் காட்சிப்படுத்த முயன்றிருக்கிறார் என்றார். காட்சிப்படுத்துதல்களையும் குறியீடுகளையும் இயக்குனர் கையாண்டிருக்கும் விதம் பாராட்டுக்குரியது. ஒரு காட்சியில் கடவுளும் கதாநாயகனும் பேசிக்கொண்டே போகின்றனர். எங்கு பார்த்தாலும் செடி கொடிகள், புல் பூண்டுகள், பூக்கள். பார்க்கவே அலங்கோலமாக இருக்கிறது. இது ஏன் இவ்வளவு அலங்கோலமாக இருக்கிறது என்று கதாநாயகன் கேட்கிறார். இல்லையே! என்கிறார் கடவுள். கேமரா கோணம் மாறி மெதுவாக உயர்ந்து பறவை கோணத்திற்குச் செல்கிறது. மேலிருந்து பார்க்கும்போது அற்புதமான வண்ணங்களும் வடிவங்களும் தெரிகிறது. இப்படி கண்ணுக்கு விருந்தளிக்கும் அடையாளங்கள் படத்தில் ஏராளம்.

உங்கள் மனத்தடையை நீக்குவதற்காகப் படத்திலுள்ள ஒரே ஒரு உண்மையை மட்டும் சொல்கிறேன். படத்தில் காட்சிப்படுத்தியிருப்பது கடவுளை அல்ல. கடவுளுடைய குணாதிசயத்தை. நான் ஏற்கனவே சொன்னதுபோல கடவுள் ஆணா பெண்ணா என்பது அல்ல இங்கே விஷயம். கடவுள் தாயுமானவர்தான் என்பதையே காட்சிப்படுத்துகிறார்கள். ஒரு தாயாக இருக்க வேண்டிய நேரத்தில் தாயாகவும் தந்தையாக இருக்க வேண்டிய நேரத்தில் தந்தையாகவும் இருப்பவரே கடவுள். படத்தைப் பாருங்கள், புரியும்.

இந்தப் படத்தை எனக்குப் பார்க்கவே பிடிக்கவில்லை என்பவரா நீங்கள்? உங்களுக்குக் கடவுளைப்பற்றி (இறையியல்) தெரியும், ஆனால் கடவுளைத் (இறைவனை) தெரியாது. பைபிள் வாசியுங்கள். நான் இந்தப் படத்தை பார்த்தேன், ஆனால் எதுவும் புரியவில்லை என்பவரா நீங்கள்? உங்களுக்குக் கடவுளைத் தெரியும், ஆனால் கடவுளைப்பற்றி தெரியாது. பைபிள் வாசியுங்கள்.





# அரட்டை பாப்

✍ ராபர்ட் க்ளமெண்ட்ஸ்




## வலியைப் புரிந்துகொள்ளுதல்...

### “ரெடி... சுடப்போறேன்” கத்தினான் நெப்போலியன்

“அவன் தர மாட்டானாம்” என்று என்னுடைய தோளை அசைத்து என் நண்பன் என்னிடம் சொன்னான்.

“ஏன்” என்று நான் கேட்டேன்.

“பணம் இல்லன்னு சொல்றான்”

“ஒருவேள அவன்கிட்ட பணம் இல்லையா இருக்கும். அவன விட்டு” என்று நான் மென்மையாகச் சொன்னேன்.

“அவன் car பாத்தியா? நம்ம ரெண்டு பேர்கிட்ட இருக்கிறதவிட விலை கூடினது” என்றான் என் நண்பன்.

“அவனுக்கு கொஞ்ச அவகாசம் கொடு” என்று சொல்லிவிட்டு, “கார் வச்சிருக் கிறதுனால சட்டை பைக்குள்ள பணம் வச்சிருப்பாங்கன்னு சொல்ல முடியாது” என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

“ஏதோ சொல்ல வந்தியே, என்ன பாப்?” என்று என் நண்பன் என் பக்கமாக வந்து கேட்டான்.

“ஆமா... ‘நெப்போலியனும் கம்பளி வியாபாரியும்’ கதை ஒனக்கு தெரியுமா?” என்று கேட்டுவிட்டு நான் தொடர்ந்தேன்.

ரஷ்யாவினுள் நெப்போலியன் படை யெடுத்து வந்தபோது ரஷ்ய குதிரைப் படையினர் சிலர் அவனை அடையாளம் கண்டுகொண்டார்கள். வளைந்து நெளிந்த தெருக்களின் ஊடாக தனியே மாட்டிக் கொண்டு ஓடிவந்த நெப்போலியனைத் துரத்திக்கொண்டு வந்தார்கள். அப்போது சிறிய கடை வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்த கம்பளி வியாபாரி ஒருவனிடம் நெப்போலியன் ஓடிப்போய், “நான் இங்கு எங்காவது ஒளிந்து கொள்கிறேன், என்னைக் காப்பாற்று” என்று பரிதாபமாகக் கேட்டான். “சீக்கிரமா இந்த கம்பளி குவியலுக்கு அடியிலே போயி மறைஞ்சுக்கோ” என்று சொல்லி, நெப்போலியன் மறைந்து கொள்ளவும் மேலும் சில கம்பளிகளைப் போட்டு நன்கு மறைத்தான் அந்த வியாபாரி.

சற்று நேரத்தில் அங்கு வந்த ரஷ்ய வீரர்கள், “எங்க அவன்? இங்க தான வந்தான்? நாங்க பாத்தோம்” என்று வியாபாரியிடம் கேட்டார்கள். அந்த வியாபாரி மறுத்தும், தேடுகிறதற்காகக் கடையைக் கலைத்துப் போட்டுவிட்டார்கள். குவித்து வைக்கப்பட்டிருந்த கம்பளிகளுக்குள் வாளைச் செருகி கிழித்தார்கள். ஆயினும், நெப்போலியனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அவர்கள் போய்விட்டார்கள்.

அவர்கள் போய்விட்டதும் சற்று நேரத்தில், நெப்போலியன் எந்தக் காயமு மின்றி கம்பளிகளுக்கு அடியிலிருந்து வெளியே ஊர்ந்து வந்தான். அவன் வெளியே வரவும், நெப்போலியனது பாதுகாப்பு வீரர்களும் வந்து சேரவும் சரியாக



இருந்தது. அப்போது அந்த வியாபாரி தயங்கியபடியே நெப்போலியனிடம், "அடுத்த நொடிதான் உங்களது கடைசிநொடியாக இருக்கக்கூடும் என்ற நிலையில் கம்பளி யின் அடியில் இருக்கும்போது எப்படி இருந்தது உங்களுக்கு?" என்று கேட்டான்.

நெப்போலியன் கோபமாக அந்த வியாபாரியிடம், "பேரரசர் நெப்போலியனிடம் இப்படிக் கேட்க உனக்கு எவ்வளவு துணிச்சல்?" என்று கேட்டுவிட்டு, தன் வீரர்களைப் பார்த்து, "இந்த திமிர் பிடித்தவனை இழுத்துக்கொண்டு வாருங்கள், மரண தண்டனை கொடுப்பதற்காக இவன் கண்களைக் கட்டுங்கள். நானே இவன் கொலை செய்யப்படும்படி துப்பாக்கியைச் சுடுவேன்" என்றான்.

அந்த ஏழை வியாபாரியை படைவீரர்கள் இழுத்துக்கொண்டுபோய், சுவர்ப் பக்கமாக நிறுத்தி, அவன் கண்களைக் கட்டினார்கள். நெப்போலியன் தன் தொண்டையைச் செருமிக்கொண்டு, "ரெடி... சுடப்போறேன்" என்று சொல்வது கேட்டது. அந்த நொடியில், இன்னும் சற்று நேரத்தில் இந்த எல்லா உணர்வுகளும் இல்லாமல் போயேபோய் விடும் என்று அறிந்தபோதும், அந்த வியாபாரிக்குள் உண்டான விவரிக்க முடியாத உணர்வு அவன் கன்னங்களின் வழியே கண்ணீராய் வடிந்தது. அப்போது யாரோ தன் அருகே நடந்து வருகிற காலடிச் சத்தம் கேட்டது, அவன் கண்களில் கட்டப் பட்டிருந்த துணி அகற்றப்பட்டது. பிரகாசமான அந்த சூரிய வெளிச்சத்திலும் ஏதோ ஓரிணைக் கண்கள் தன் கண்களைக் கூர்ந்து பார்ப்பதை வியாபாரி உணர்ந்தான். நெப்போலியன் கேட்டான், "இப்போது தெரிகிறதா?" என்று.

நான் இந்தக் கதையைச் சொல்லி முடிக்க வும் என் கண்களில் கண்ணீருடன் என் நண்பனைப் பார்த்தேன். "அந்த ஆளுக்கு பணம் கட்ட கொஞ்ச அவகாசம் குடுப்போம். அந்தச் சூழ்நிலை எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியும்!" என்று நான் என் நண்பனிடம் சொன்னேன்.

பல நேரங்களில் ஆண்டவர் நம்மைப் பிரச்சனைகளின் ஊடாக அழைத்துச் செல்வதில் நோக்கம் இருக்கிறது. அந்தப் பிரச்சனைகளின் வலியை நாம் உணர்ந்த பிறகு, நம்மால் அதே பிரச்சனையில் இருக்கும் மற்றவர்களுக்குத் தீர்வாக இருக்க முடியும். அதுதான் அவரது நோக்கமாகும். ■■■

**ஆசிரியரின் இதர படைப்புகளை ஆங்கிலத்தில் வாசிக்க https://bobsbanter.com/ என்ற இணையதளப் பக்கத்தைத் தொடரலாம். rtgclements@gmail.com என்ற மின்னஞ்சலில் தொடர்புகொண்டு வாட்சப்பில் தினமும் அவருடைய கட்டுரைகளை ஆங்கிலத்தில் பெறலாம். இக்கட்டுரையானது ஆசிரியரின் அனுமதி பெற்று, தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகிறது.**



### கல்யாணமாம் கல்யாணம்

ஜெஸ்வின்

# துணை அல்ல இணை

அக்காலத்தில் கிராமங்களில் மாட்டுவண்டுகள் சாதாரணம். தோட்ட வேலைகளையும் தாண்டி வாழ்வின் எல்லாப் பயன்பாடுகளிலும் மாட்டுவண்டிகள் நீக்கமற நிறைந்திருந்தன. மாட்டுவண்டிகள் என்றாலே ஏதோ உள்ளூர்களில் மட்டும் பயன்படுத்தப்பட்டது என நினைத்துவிடக் கூடாது. இக்காலத்தில் சிற்றுந்திலும் பேருந்திலும் செல்லும் இடங்களுக்குக்கூட அக்காலங்களில் மாட்டுவண்டிகளில் சென்றிருக்கிறார்கள். சரி, திருமணம் பற்றி பேசும் இடத்தில் மாட்டுவண்டிக்கு என்ன வேலை? இருக்கிறது. திருமணத்தின் அடிப்படை சாரம்சத்தைப் புரியவைப்பதில் மாட்டுவண்டிக்கு மாற்று கிடையாது.

பொதுவாக இரண்டே வகை மாட்டுவண்டிகள் தான் உண்டு. ஒரே ஒரு காளையை மட்டும் பயன்படுத்தும் மாட்டுவண்டி, இரண்டு காளைகள் பயன்படுத்தும் மாட்டுவண்டி. நாம் கவனிக்கப்போவது இரண்டு காளை மாட்டுவண்டி.

இந்த இரட்டை மாட்டுவண்டியை இழுப்பதற்கு இரண்டு மாடுகளை வண்டியின் முன் இணைக்க வேண்டும். அப்படி இணைப்பதற்கு மாட்டின் கழுத்துப்பகுதியின் மேல் திமிலுக்கு முன்னால் உறுதியான மரத்தினாலான ஒரு துண்டை வைத்து இணைப்பார்கள். அதின் பெயர் நுகம். மாட்டுவண்டி சரியாகச் செல்லவேண்டுமானால் இரண்டு மாடுகளுக்கும் வண்டியின் எடை சரியாகப் பகிரப்பட வேண்டும். அதற்கு இரண்டு மாடுகளும் உயரத்தில் சமமானதாக இருக்க வேண்டும். ஒரு மாட்டின் உயரத்தைவிட இன்னொரு மாட்டின் உயரத்தில் பெரிய வேறுபாடு இருந்தால் நுகத்தை மாடுகளின் கழுத்தில் இணைப்பதும் கடினம். அப்படியே இணைத்தாலும் அந்த மாட்டுவண்டி ஓட வேண்டிய விதத்தில் ஓடாது.

இங்கே நான் அந்த மாடுகளின் உயரத்தை நம்பிக்கைக்கு ஒப்பிட விரும்புகிறேன். மாடுகளின் நிறங்கள் வெவ்வேறாக இருக்கலாம்.ஒரு மாட்டுக்கு கொம்பு உயரமாகவும் இன்னொன்றுக்கு குள்ளமாகவும் இருக்கலாம். உருவங்கள் கூட சற்று மாறுபட்டு இருக்கலாம். ஆனால் உயரத்தில் வேறுபாடு இருந்தால் எப்படி வண்டி ஓடாதோ அதைப்போலவே திருமணம் எனும் நுகத்தில் இணைக்கப்படும் வாழ்க்கைத் துணைகளின் இடையில் நம்பிக்கையில் வேறுபாடு இருந்தால் வாழ்க்கை ஓடாது.



**“இதெல்லாம் ஒரு விஷயமா? எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் சரியாயிரும் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கு ஒரு கதை.”**

வாழ்க்கைத்துணை என்கிற பெயர் நிலைத்துவிட்டாலும் நீங்கள் உங்களுடன் இணைந்து வாழ்க்கையை இழுக்க ஒரு இணையை தேடுகிறீர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. நீங்கள் எவைகளை நம்புகிறீர்கள், அவைகளை எப்படி நம்புகிறீர்கள் என்பதை முதலில் சரியாகக் கண்டுபிடியுங்கள். பின்னர் அதற்கிசைந்த நம்பிக்கை உடைய நபரை உங்கள் இணையாகத் தெரிந்தெடுங்கள். வரன்களை பார்க்கும்போதும் முதலில் நீங்கள் குடும்பமாக உட்கார்ந்து பேசி, உங்கள் நம்பிக்கைகள் மற்றும் அதனடிப்படையில் அமைந்த பழக்கவழக்கங்கள் என்ன என்பது பற்றி தெளிவான புரிதலுக்குள் வாருங்கள். பின்னர் அதைப்போன்ற நம்பிக்கை மற்றும் பழக்கவழக்கங்கள் உள்ள குடும்பத்தில் வரன் எடுங்கள். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள எளிதாக இருக்கும். திருமணத்தின் அடைப்படையே புரிதல்தான்.

கடவுள் நம்பிக்கை, வாழ்க்கையின் நோக்கம், வெற்றி என்பது என்ன? போன்றவைகளை அலசிப்பார்ப்பதின் மூலம் உங்கள் நம்பிக்கையைப் புரிந்துகொள்ள முடியும். நீங்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவரா? எவ்வாறு அந்தக் கடவுளை நம்புகிறீர்கள்? கடவுள் நம்பிக்கை இல்லாதவரா? கடவுள் நம்பிக்கை இல்லாத எந்தக் கூட்டத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்? கடவுளை விடுங்க உலகத்துல பணம்தான் முக்கியம் என்று நினைப்பவரா? உணவைப்பற்றிய உங்கள் நம்பிக்கை என்ன? எந்த மருத்துவ முறை சரியானது?

வெறும் பணம், அழகு, வேலை, ஜாதி போன்றவற்றை மட்டும் பார்த்து திருமணத்தை முடித்துவிட்டு பின்னர் நம்பிக்கை அடிப்படையில் முட்டிக்கொள்ளும் குடும்பங்களும் தம்பதிகளும் ஏராளம். இதெல்லாம் ஒரு விஷயமா? எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம் சரியாயிரும் என்று நினைக்கிறீர்களா? உங்களுக்கு ஒரு கதை.

ஒருநாள் விவசாயி ஒருவர் தனது நண்பரை பார்க்கப் போனார். நண்பர் மாட்டுக்கொட்டகையில் மாட்டிற்கு முன்னால் கிறங்கிபோய் வேர்த்து விறுவிறுத்து உட்கார்ந்திருந்தார்.

என்னவே ஆச்சி? என்று கேட்டார் விவசாயி.

மாட்டுக்கு கொஞ்சம் உடம்பு சரியில்ல. டாக்டர் மாட்டுக்கு ஒரு மாத்திர குடுக்க சொன்னாரு.

சரி.

மாட்டுக்கு எப்படி மாத்திர குடுக்கிறதுனு யோசிச்சேன். ஒரு குழாய்க்குள்ள மாத்திரைய வச்சு மாட்டு தொண்டைக்குள்ள வச்சு ஊதி உட்ரலாம்னு நெனச்சேன்.

நல்ல யோசனதான!

அதுல்ல... மாட்டு தொண்டைக்குள்ள குழாய வைச்சு ஊத போனேனா... நா ஊதுறதுக்குள்ள மாடு ஊதிரிச்சு.

கல்லாணத்துக்கு அப்புறம் ஊதலாம்னு நெனைக்குறதெல்லாம் சரிதான். எதிர் தரப்பும் ஊதும் என்பதை மறக்கக்கூடாது.



# பனிச்சென்று விடிந்திருக்கின்றது

ஹாரிஸ் பிரேம்

இப்புத்தாண்டின் முதல் சூரியக்கதிர்களைப் பார்க்கும்போதே மனம் புல்லரிக்கிறது...

ஒவ்வொரு இரவையும் விடியல் விழுங்கும்போதே இவ்வுலகத்தின் அனைத்து தடைகளையும் தாண்டி நாம் சிறகை விரிக்க முடியும் என்னும் நம்பிக்கை துளிர் விட்டுவிடுகிறது.

முடிவில்லா ஆழிப் பெருங்கடலின் ஓயாத அலைகள் மத்தியில் சின்னம் சிறியதாய் கிடந்து அலைக்கழிக்கும் படகு போன்றது வாழ்க்கை.

அலைகளை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கும்வரை வாழ்க்கை சுவாரசியமாக இருக்கிறது. போராட்டத்தை விட்டொழிக்கும்போது அது இன்னும் இன்னும் நம்மை அலைக்கழிக்கவே செய்கிறது என்கின்றது மனம். மிரட்டும் பெருங்கடலின் பேரிரைச்சலையும் உயர்ந்து வரும் பேரலைகளையும் பார்க்கும்போது பயங்களைத் தாண்டி சில நேரங்களில் அதை ரசிக்கவும் வேண்டியதிருக்கிறது. ஆனால் பயம் நம்மை மீண்டும் போராட்டத்திற்கே அழைக்கின்றது!

வாழ்க்கையின் ஓயாத ஓட்டத்தில் கடவுளின் கைவிரல்கள் வரையும் எத்தனையோ அழகு ஓவியங்கள் கண்டுகொள்ளப்படாமலே போய்விடுகிறது.

பணத்தையும் பொருளையும் நோக்கிய வாழ்க்கைப் பயணங்கள் அதன் இறுதிக் கட்டத்தை வந்து எட்டும்போதுதான் தெரிகின்றது கரை சேர்ந்திருப்பது தீவு அல்ல, திமிங்கலத்தின் முதுகு என்று!

இதற்குத்தானா இவ்வளவு தீவிரமாக ஓடினோம் என்பதை யோசிக்கும்போதே திமிங்கலம் வாயைப் பிளந்து விடுகிறது!

ரெகே இசையின் கடவுள் என்று அழைக்கப்பட்டார் பாப் மார்லி!

இன்றளவும் ரெகே இசைக்கான மூலங்களைப் பலரும் அள்ளிக்கொள்ளுவது பாப் மார்லியிடமிருந்துதான்!

ஜமைக்கா நாட்டு பிரஜையான பாப் மார்லி, த வெய்லர்ஸ் என்ற தன்னுடைய அணியோடு தயாரித்த பெருந்தகடுகள் லட்சக்கணக்கில் விற்றுத் தீர்ந்தன. இசைப் போராளியான பாப் மார்லியின் பாடல்களில் தெறித்த வெறியும் இசையின் வசீகரமும் ஜனங்களை உரிமைக்காகப் போராட தட்டி எழுப்பியது!



“நோ ஒமன் நோ கிரை” என்ற அவருடைய முத்திரை பாடல் மட்டும் 10 லட்சத்திற்கு மேல் விற்றுத் தீர்ந்தது!

பாப் மார்லியின் இன்னிசை நிகழ்வுகளுக்கான டிக்கெட்டுகளுக்கு காத்துக் கிடக்க வேண்டிய சூழ்நிலை வந்தது!

வெகுவிரைவில் மில்லியனர் ஆகிவிட்ட பாப் மார்லியின் கால்பெருவிரலில் புற்று நோய் வந்தது! விஷமாய் அது தலைவரை பரவ வாசலில் படுத்துக்கிடந்த மரணம் தன் படுக்கையை எடுத்துக்கொண்டு படுக்கை அறைக்குள் பிரவேசித்தது.

வெறும் 36 ஆவது வயதில் மரணத்தைத் தழுவ வேண்டிய கட்டாயம் பாப் மார்லி–க்கு!

மரிப்பதற்கு முன் தான் மிகவும் நேசித்த தன் மகனை நோக்கி பாப் மார்லி சொன்ன வார்த்தைகள் மிகவும் முக்கியமானவை.

“மகனே பணத்தை வைத்து வாழ்க்கையை வாங்க முடியவில்லை!”


ஆப்பிள் கம்ப்யூட்டர் நிறுவனத்தின் அத்துமீறிய வளர்ச்சியைப் பார்த்து உலகமே பொறாமைப்பட்டுக் கொண்டிருந்தபோது அதன் உரிமையாளர் ஸ்டீவ் ஜாப்ஸின் உடலுக்குள் புற்று பரவிக்கொண்டிருந்தது!

ஐஃபோன்களும் ஐமேக்குகளும் கம்ப்யூட்டர் உலகத்தைத் தலைகீழாக மாற்றிக் கொண்டிருந்தபோது ஸ்டீவ் ஜாப்ஸின் நரம்புகளுக்குள் மருந்துகள் ஏறிக் கொண்டிருந்தன!

தான் இந்த உலகத்தை விட்டு கடந்துபோகும் முன் இவ்வுலகத்திற்கு எழுதிய கடைசி கடிதத்தில் ஸ்டீவ் ஜாப்ஸ் தெளிவாக எழுதினார்.

“சில நேரங்களில் நாம் எதற்காக இவ்வளவு வேகமாக ஓடுகிறோம் என்பதைப் பற்றி யோசிப்பதில்லை! வாழ்வதற்குப் போதும் என சம்பாதித்து விட்ட பிறகு நம்முடைய ஆன்மா சொல்லுகின்ற விஷயங்களில் மனதை ஈடுபடுத்துவது நலம்”

அந்த உண்மையை அவர் உணர்ந்தபோது உலகம் அவருக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தது!





ஒரு கோப்பை காபி அருந்தும் நேரத்தில் எதுவும் நடந்து விடலாம் என்ற சிந்தனையைக் கிளறும் வரிகளை ஒரு முறை கஃபே காஃபி கடையில் பார்த்தேன். lot can happen over a cup of coffee!

சிக்மங்களூரின் அழகிய காப்பித் தோட்டங்களில் அறுவடை செய்யப்பட்ட மணமிக்க காப்பி கொட்டைகள் கஃபே காஃபி டேயில் அரைபட்டுக்கொண்டிருக்கும்போதே பல காதல் இணையும், சில காதல்கள் தோற்கும்! எத்தனையோ பேர் கஃபே காஃபி கடையில் தங்கள் எண்ணங்களைப் பரிமாற்றம் செய்திருக்கிறார்கள், தங்கள் தொழிலுக்கான துவக்கத்தைப் பெற்றிருக்கிறார்கள்!

கரை புரண்டு ஓடும் நேத்ராவதி ஆற்றில் அதன் அதிபர் குதித்து தற்கொலை செய்துவிட்டபோது பத்திரிகைகள் எழுதியிருந்தன, “ஒரு காபி குடித்து இருக்கலாமே சித்தார்த்தா! நீங்கள்தானே சொன்னீர்கள் எதுவும் நடக்கலாம் ஒரு காபி குடிக்கும் நேரத்தில் என்று!”

இவ்வுலகத்திற்கு எழுதிய தன் கடைசி கடிதத்தில் சித்தார்த்தா எழுதி இருந்தார் “ஒரு தொழில் முனைவோராக முற்றிலும் தோற்று இருக்கிறேன்” என்று!

இந்த ஆண்டில் வாழ்க்கை பெருங்கடலில் உங்கள் துடுப்புகள் அவ்வப்போது ஓய்வெடுக்கட்டும்!

டால்ஃபின்களாய்த் துள்ளும் உங்கள் குழந்தைகளைக் கொஞ்சம் ரசியுங்கள்!

மின்னி மறையும் சின்ன மீன்களாய் உதிரும் அவர்கள் புன்னகைகளைக் கொஞ்சம் அள்ளுங்கள்!

மெதுவாய் நீந்தி வரும் கடல் ஆமைகள்போல் நோயுற்றிருக்கும் வயோதிபரையும், ஏழைகளையும் இதமாய்த் தடவிக் கொடுங்கள்!

கையில் இருப்பதைக் கொஞ்சம் கடலுக்குள் போடுங்கள், சின்னஞ்சிறுசுகள் பசியாறட்டுமே!

அருகில் வந்து டைவ் அடிக்கும் நீலத் திமிங்கிலங்கள் போன்ற பிரச்சினைகளை அமைதியாய்ப் பார்க்கப் பழகுங்கள்!

அலை விசிறி அடிக்கும் உப்புத் தண்ணீர் போன்ற கண்ணீரைப் பன்னீராய் மாற்றுங்கள்!

கடலுக்குள் தங்கமாய்த் தகிக்கும் சூரியனின் கதிர்களை ஆராதியுங்கள்!

உடலை இழந்த பின்பும் உயிரோடுதான் வாழப்போகிறோம், அந்த வாழ்க்கைக்கு என்ன சேர்த்து வைத்திருக்கிறோம் என்பதை யோசியுங்கள்!

**பளிச்சென்று விடிந்திருக்கின்றது. இப்புத்தாண்டின் முதல் சூரியக்கதிர்களை பார்க்கும்போதே மனம் புல்லரிக்கிறது...**



நெட்டதில் சுட்டது...

# கார்ப்பரேட் விளம்பர திண்டாட்டம்

உள்ளங்கையிலிருந்து உள்ளாடைகள் வரை கிருமிகள் மனிதர்களை வேட்டையாடிக் கொண்டிருப்பதைப் போன்ற விளம்பரங்கள் நிஜமா?

காலையில் எழுந்து பல்துலக்கப் போனால் விளம்பரத்திலிருந்து வெள்ளைக் கோட்டு அணிந்து குறுந்தாடி வைத்த செட் அப் மருத்துவர் “உங்கள் பல்லிடுக்கில் பதுங்கி இருக்கும் கிருமிகளை உங்கள் பற்பசை கொல்லுமா? எங்கள் பற்பசை உபயோகித்தால் பனிரெண்டு மணி நேரம் கிருமிகளிடமிருந்து உங்கள் பல்லுக்கும் வாய்க்கும் பாதுகாப்பு” என்று பாடம் நடத்துகிறார்.

விட்டால் வீடுவீடாக வந்து காலங் காத்தாலே பல் துலக்கி விட்டு ஹோம்டெலிவரி என்று செர்வீஸ் சார்ஜும் போட்டு பில்லை தலையில் கட்டுவார்கள் போல.

கக்கா போகலாம் என்று கக்கூசுக்கு போனால் உட்காராதீங்க உட்காராதீங்க என்று அங்கே ஒரு மாஜி நடிகர் வலக்கையில் துடைப்பமும் இடக்கையில் கிருமிநாசினியுமாக உள்ளே நுழைகிறார்.

“அட நிம்மதியா காலைக்கடன் கழிக்க கூட விடமாட்டீங்களா” என்றால் “உங்க டாய்லெட்டு 100% சுத்தமா இருக்கா?” என்கிறார். “அட வாரத்துக்கு ஒருக்கா கழுவி வுடுறேன் நீங்க போங்க பாஸ்” என்றால் கையிலிருக்கும் பூதக்கண்ணாடியால் கக்கூசை ஆராய்ச்சி செய்கிறார். “சார் இது போதவே போதாது எங்க டாய்லட் கிளீனர யூஸ் பண்ணினீங்கன்னா கிருமிகள் எல்லாம் செத்துரும் நாள் முழுக்க கக்கூஸ் நல்லா இருக்கும்” என்கிறார்.

“யோவ் நான் என்னய்யா நாள்முழுக்க கக்கூசுலயா குடித்தனம் நடத்துறேன் போய்யா” என்றால் “ சார் ஸ்மார்ட் கக்கூஸ் ஸ்மாட்டஸ்ட் கக்கூசர்” என்கிற காண்டெஸ்ட்ல வின் பண்ணினா நீங்க வெளிநாடு போகலாம்” என்றபடி பாட்டிலுடன் கூப்பனை நீட்டுகிறார்.

ஒரு வழியா வெளிய வந்தா, ஒருத்தன் ஓடி வந்து கைய புடிச்சு ஒரு மைக்ரோஸ்கோப்புல வச்சிட்டு சொல்றான் “ சார் பாருங்க உங்க உள்ளங்கை முழுக்க ஆயிரக்கணக்கான கிருமிகள்”. “யோவ் நீ யாருய்யா. நான் நல்லா கைய கழுவிட்டு தான்யா வந்திருக்கிறேன்” என்று நான் டென்ஷனாகலாம் என்று பார்த்தால் பதிலுக்கு அவர் டென்ஷன் ஆகிறார்.



“சார் நீங்க வெறும் தண்ணீல கைய கழுவினீங்களா எங்க ஹேண்ட் வாஷ் எக்ஸ்பெர்ட் போட்டு கழுவினீங்களா? இல்ல உங்க ஹேண்ட் வாஷ் எக்ஸ்பெர்ட் போட்டு கழுவல. அப்போ எப்படி சார் உங்க கையில கிருமிகள் எல்லாம் சாகும்” என்று பீதியூட்டும் புன்னகையுடன் பார்க்கிறார்.

வேண்டாம் விட்டுடுங்க என்பதை கேக்காமல் உள்ளங்கையில் ரெண்டு சொட்டை வைத்து இப்போ நல்லா கழுவுங்க சார் என்கிறார். “யோவ் என்னமோ நான் பொறந்ததிலேருந்தே கையை கக்கூசுக்குள்ள விட்டுட்டு திரிஞ்ச மாதிரியில்ல இருக்கு உன் பேச்சு ஆளவிடுப்பா” என்று குளியலறைக்குள் நுழைந்தால்,

அங்கே ஒரு அம்மா கையில் சோப்புடன் உங்க ஸ்கின்னோட பத்து பிரச்சனைகளுக்கு இது தான் தீர்வு என்று சோப்பை மூக்குக்கு நீட்டுகிறார்.

“இந்தாம்மா இந்த பத்து படை இதெல்லாம் எனக்கு பிரச்சினையே இல்ல முதல்ல ஆம்பிள குளிக்கிற இடத்துல உனக்கென்னமா வேலை வெளிய போம்மா” என்கிறேன்.

“சார் அப்போ எங்க சோப்ப போடுங்க, உங்க அக்குள்ல இருந்து தொப்புள் வரைக்கும் கிருமிகளை கழுவிக்களைய இது இருபத்தி நாலுமணி நேர கேரண்டி” என்று அண்டாவுக்குப் பின்னாலிருந்து எழுகிறாள் இன்னொரு பெண்.

“உட்டா உலகத்துல இருக்கிற கிருமியெல்லாம் என் உடம்ப குத்தகைக்கு எடுத்து குடித்தனம் பண்றதா சொல்வீங்க போல”ன்னு வெளிய தொரத்திட்டு குளிச்சு முடிக்கிறதுக்குள்ள போதும் போதும்ணு ஆயிடிச்சு.

நிம்மதியா சாப்பிடலாம்னு ஒரு பிடி சோத்த வாய்க்கு கொண்டு போற நேரத்துல பொருத்தமே இல்லாம வேலைக்காரி வேஷம் போட்ட ஒரு விளம்பர மாடல் வந்து கைய பிடிச்சு சாப்பிடறத நிறுத்துறா.

பதட்டத்தோட பரபரக்கிற என் மனைவி கிட்ட கேக்குறா “பாத்திரம் கழுவும்போது பாத்து கழுவினீங்களா”. என் மனைவியோ செய்யக்கூடாத குற்றத்தை செய்து விட்டது போல திருதிருவென்று முழிக்கும் கணத்தில்,

“உங்க பாத்திரங்கள் எங்களோட நீமும் எலுமிச்சையுமுள்ள டிஷ் வாஷ் வச்சி கழுவினா தான் கிருமிகளெல்லாம் சாகும். பாத்திரமும் பளபளக்கும்” என்கிறாள்.

“அட நிம்மதியா சாப்பிடவும் விட மாட்டீங்களா” என்று எழுந்து தண்ணி குடிக்கப் போனால் அங்கேயும் விடுறதாயில்லை.

ஜன்னல் வழியாக எட்டி பார்த்து எகத்தாளமாய் சிரித்து விட்டு ஒருவன் சொல்கிறான் “உங்க தண்ணி சுத்தமானதா? எங்க தண்ணி 100% ஜெர்ம்ஸ் ஃப்ரீ, அடிஷனலா இரும்பு சத்தும் சேர்த்திருக்கோம்”

“யோவ் என்னைய்யா தண்ணியையே நீங்க தான் கண்டு பிடிச்ச மாதிரி பேசுறிங்க” என்றால் “ இரும்பு சத்து சார் இரும்பு சத்து” என்று பாட்டிலை வாய்க்கு நேராக நீட்டி ஆட்டுகிறான். “இரும்பு சத்து வேணும்னா நான் இந்த ஜன்னல் கம்பியையே கடிச்சு சாப்பிட்டுக்கிறேன் நீ கிளம்புப்பா” என்று துரத்தி விட்டு திரும்பி சட்டையை போட்டுட்டு கிளம்பலாம் என்றால்,

அங்கேயும் ஒரு எக்ஸ்பெர்ட் கையில் பாட்டிலுடன் நிக்கிறான்.

அவன் சொல்லும் முன்பே நான் முந்தி கொள்கிறேன் ''யோவ் இது சத்தியமா சுத்தமா துவச்ச சட்டை தான்யா'' என்கிறேன்.

அவனோ சிரித்தபடி ''துவச்சீங்க ஆனா எங்களோட இந்த ப்ராடக்ட்ல ரெண்டு சொட்டு உட்டு துவச்சீங்கன்னா துணியில ஒரு கிருமி கூட ஒட்டிக்கிட்டு இருக்காது'' எனக்கு சட்டையே வேண்டாம் என்று ஹேங்கரை தூக்கி எறிந்து விட்டு ஹாலிற்கு வந்தேன்.

''சார் காலை கொஞ்சம் தூக்குங்க'' என்று தரையை தண்ணீர் விட்டு துடைக்கிறாள் இன்னொரு விளம்பர பெண் ''என்னம்மா என்ன ஆச்சு'' என்றால் ''தரையெல்லாம் கிருமிகள் சார்.

எங்க ஃப்லோர் கிளீனர் கண்ணுக்கு தெரியாத கிருமியை எல்லாம் அழிச்சு உங்க தரையை சுத்தம் பண்ணிடும். காலை தூக்குங்க சார்'' என்ற படி தரையில் ஒரு தேய்ப்பு தேய்க்கிறாள்.

''கண்ணுக்கு தெரியாத கிருமி எல்லாம் உங்களுக்கு எப்படி தெரியுது'' என்றால் ''டெக்னாலஜி சார் டெக்னாலஜி'' என்கிறாள்.

காலையில எழுந்து, கக்கூஸ் போனா கிருமி, கைய கழுவினா கிருமி, பல்லை தேய்ச்சாலும் கிருமி, குளிச்சாலும் கிருமி, நடந்தா காலுல கிருமி நடக்குற தரையிலும் கிருமி, உட்காந்தா கிருமி, உட்காருற இடத்திலயும் கிருமி, முகத்தை தொடச்சா கிருமி, சாப்பிட்டா கிருமி, சாப்பிடுற தட்டிலயும் கிருமி, தண்ணி குடிச்சா கிருமி, வெளியில போனா கிருமி, உள்ள வந்தா கிருமி, மண்டைல கிருமி, தொண்டையில கிருமி, வாயில கிருமி, வாசலில கிருமி, துணியில கிருமி, தும்மினா கிருமி, தூங்கினா கட்டில்ல கிருமி, தூங்கி எழுந்தா மறுபடியும் பல்லுல கிருமி என்று தெனாலி கமல் மாதிரி தினமும் பொலம்ப வச்சிடுறானுங்க.

''ஏண்டா இந்த பூமியில கிருமி நாசினிகள் வரும் முன்னாடியே மனுஷங்க வாழ்ந்திட்டு இருக்கானுங்க, மனுஷங்க வரும் முன்னாடியே கிருமிகள் வாழ்ந்திட்டு இருக்கு.

அதுபாட்டுக்கு இருந்திட்டு போகட்டும் இப்படி உலகத்தையே கழுவி தொடச்சி கிருமிகள அழிச்சி பளபளன்னு வச்சிட்டு பவுடர் போட்டு அழகு பாக்கவா போறீங்க.

ஓடிப்போயிடுங்க என்றபடி மனைவியைப் பார்த்தேன். அவள் சொன்னாள் '' கடைசியா ஒரு உண்மை தெரிஞ்சு போச்சு, இந்த டிவி பொட்டியிலிருந்துதான் எல்லா கிருமிகளும் இங்கே வீட்டுக்குள்ள வருது முதல்ல அத அணைச்சிடுங்க'' என்கிறாள். நான் டிவியை அணைத்து விட்டேன். அதிலிருந்து எங்கள் வீட்டுக்குள் கிருமிகள் இருக்கலாம் ஆனால் வியாபாரக்கிருமிகள் இல்லை.

இப்போதான் நானும் என் மனைவியும் குழந்தைகளும் கிருமிகளும், கொஞ்சம் நிம்மதியா இருக்கிறோம் என்கிறார் ஒரு சாமானியன்.





அத்தியாயம் 9

# அனெஹேறாவின் விரக்தி

The DISILLUSIONMENT of ANAHERA DANIELS by J.D.SCOTT

## வீடு

நீண்ட ஒரு சுரங்கத்தின் அடுத்த பக்கத்தில் இருந்து என் பெயர் ஒலித்தது.

“அனெஹெறா போகாதே”

“அனெஹெறா போகாதே” இப்போது அந்த சத்தம் அதிகரித்தது.

“அனெஹெறா, நேரம் ஆச்சு. போகலியா?”

“இன்னுமா தூங்கிட்டு இருக்கிற. நேரம் ஆச்சு”

“அனெஹெறா, எழுந்திரு. வேலைக்குப் போகணும் இல்லியா? லேட்டாகப் போவுது”

என் உடல் முன்னும் பின்னுமாக அதிர்ந்தது. அம்மா என்னைப் பிடித்து உலுப்பியது என்னுடைய மயக்க நிலையிலிருந்து என்னை மீட்டு எடுத்தது. என் தலை இன்னும் கிறுகிறுத்துக் கொண்டுதான் இருந்தது. என்ன நடக்கிறது, நான் எங்கே இருக்கிறேன் என்பதே எனக்குப் பிடிபடவில்லை. ஆனால் இந்தக் குரலை எந்த இடத்திலிருந்தும் என்னால் அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

“அம்மா, நீங்களா?” என் உலர்ந்துபோன வாயிலிருந்து வார்த்தைகளை உதிர்த்தேன்.

“அம்மா இல்லாம வேற யாரு வருவாங்க? எழுந்திரு அனா. வேலைக்கு இன்னிக்கு லேட்டாப் போகாத. ம்... எழுந்திரு, எழுந்திரு.” நான் பதில் எதுவும் சொல்லாததால் அம்மாவின் உலுப்பல் நின்றது. இப்போது அம்மா அடுத்த கட்ட நடவடிக்கையை முயற்சி செய்தார்கள். சட்டென்று ஜன்னலின் திரையை விலக்கினார்கள். வெளிச்சம் என் கண்களில் ‘சுள்’ என்று விழ வைத்தார்கள். இப்போதையை நிலையில் என்னால் சும்மாவே கண்களைத் திறக்க முடியாது. ஒரு நிமிஷம்.... இது என் படுக்கை அறைதானே! எங்க வீடுதானே! கம்பளிக்குள்தானே

நான் படுத்திருக்கிறேன்! எதுவும் நடந்த எந்த அறிகுறியும் இல்லையே! அம்மா என் டயரியையும் பென்சிலையும் எடுத்து அலமாரியில் வைத்தார்கள். அப்படியே என் கட்டிலில் 'சொத்' என்று உட்கார்ந்தார்கள்.

''நல்லாத்தானே இருக்கிற? உடம்புக்கு ஒண்ணும் இல்லியே?'' அம்மா என் நெற்றியில் தன் புறங்கையை வைத்து காய்ச்சல் இருக்கிறதா என்று பார்த்தார்கள். ''கொஞ்சம் வெது வெதுன்னுதான் இருக்கு. ஆனா காய்ச்சல் இல்ல. சரியாயிரும்.''

நான் அம்மாவின் கைகளைப் பிடித்துக் கொண்டேன், இறுக்கமாக, ''அம்மா, நீங்க இல்லாம...''

அம்மா தன் கண்களைக் குறுக்கிப் பார்த்தார். என் கன்னத்தில் ஒரு முத்தமிட்ட பின் கடைசியான கட்டளைகளைச் சொல்லியபடியே வெளியே போனார்கள், ''இப்போ, உடனேயே நீ எழுந்திருக்கணும். இன்னும் இருபது நிமிஷத்துல நீ வேலையில இருக்கணும். இப்படி கடைசி நேரம் வரைக்கும் தூங்கிட்டு அரக்கப் பரக்க ஓடக்கூடாது. ராண்டல் உங்கிட்ட நல்லா இருக்காருன்னுட்டு ரொம்பவும் அட்வாண்டேஜ் எடுத்துக்கக் கூடாது. நாளைல இருந்து ராத்திரியே அலாரம் செட் பண்ணி வச்சுட்டுப் படுக்கப் போ. சரியா?'' அம்மா வெளியேறி கதவையும் சாத்திவிட்டுப் போனார்கள். மரப்படியில் அம்மா இறங்கும் 'கிரீச் க்ரீச்' சத்தம் மெதுவாக மங்கிக் கொண்டிருந்தது.

எதையுமே நம்ப முடியாமல் என் உள்ளங்கையால் நெற்றியில் 'சப்' என்று அடித்துக் கொண்டேன். அது சிறிது கதகதப்பாக இருந்தது. ஆனால் அது முக்கியமல்ல. நான் எப்படி வீட்டுக்குத் திரும்ப வந்தேன்? ஆட்ரியன் வழி கண்டுபிடித்து என்னை வீட்டில் கொண்டு வந்து விட்டானா? அவன் என் பக்கத்தில் எங்கேயும் இல்லையே? அவன் கத்தியதும்



எதிரொலித்துக் கொண்டிருக்கிறதே? போகாதே என்று அல்லவா அவன் கத்தினான்? அவன் என்னைக் கொண்டு வந்து விட்டிருந்தால் அவன் ஏன் அப்படிக் கத்தியிருக்க வேண்டும்? என் நிலைமையைப் பார்த்து அவன்தான் என்னை வீட்டில் விட நினைத்திருக்க வேண்டும். நான் இப்போது வீட்டில்தான் இருக்கிறேன். நான் எங்கேயும் போகாமல் வீட்டிலேயேதான் இவ்வளவு நேரமும் இருந்திருப்பேனோ? காய்ச்சலில் வந்த ஒரு தீவிரமான கனவுதானோ எல்லாம்? அப்படித்தான் இருக்கும் என்று நினைத்தேன். ஆனால்... ஆனால், ஆட்ரியன் ஒரு கனவுதான் என்றால்...? அவன் கனவு என்றால்... மீண்டும் அவனைப் பற்றி நினைத்துக் கனவு காண வேண்டும். ஆனால் இந்த மாதிரி பயங்கரமான சூழ்நிலையில் அல்ல.

நான் மெதுவாக உருண்டு எழுந்தேன். இன்று நான் எவ்வளவு நேரம் தாமதமாகப் போகப் போகிறேன் என்று கணக்கிட்டேன். நேரம் அதிகாலை 12 மணி என்று காட்டியது. திரும்பவும் கரண்ட் கட்டா? அப்பாவிடம் சொல்லி சீக்கிரம் சரி செய்யச் சொல்ல வேண்டும். சரியான நேரத்துக்கு



அலாரம் அடித்து எழுந்திருந்தால் கனவுகளும் சம்பவங்களும் இப்படிக் கோர்த்து வைத்த மாலைபோல வந்து என்னைத் துன்பப்படுத்தாது. எது எப்படியோ எல்லாம் முடிந்து போனது. வினோதமான நிம்மதியும் ஒரு சோகமும் கலந்த உணர்ச்சி எனக்குள் உருவானது.

கம்பளியைத் தூக்கி வீசிவிட்டு எழுந்திருக்க முயற்சி செய்தேன். என் தலை சில அங்குல உயரம் எழுந்த பின்னர் மீண்டும் தலையணையில் இருந்த இடத்திலேயே அடைக்கலமானது. எழுந்து உட்காருவதே ஒரு பெரிய சாதனையைப்போல இருந்தது. நான் அதிகம் பலவீனமாக இருந்தேன். என் உடலின் ஒவ்வொரு தசையும் வலித்தது. என் உடம்புக்கு ஏதோ ஆகிவிட்டதுபோல இருக்கிறது. மீண்டும் எழுந்திருக்க முயற்சித்தேன். இப்போது என் கண்கள் பாதி திறந்திருந்தன. என் இடது பக்கத் தோளில் ஒரு குளிர்ச்சியான உணர்வு ஏற்பட்டது. நான் தடவிவிட என் விரல்களைக் கொண்டு போனேன். அந்த இடத்தின் தோல் சிறிது மென்மையாக இருந்தது. சட்டையில் அந்தப் பகுதி கிழிந்திருந்தது. கிழிந்திருந்த பகுதியிலுள்ள நூல்களில் இரத்தம் சிறிது உறைந்து, காய்ந்து போயிருந்தது.

சட்டென்று கூர்மையாக என் நினைவில் பல சம்பவங்கள் திரைப்படம்போல பளிச்சிட்டு மறைந்தன. ஆட்ரியன், குகை, உள்ளே ஒரு ஓரத்தில் நெருப்பு, காட்டுக்குள் பயணம், அவனை நோக்கிய ஓட்டம்... நான் அந்த விலங்கிடம் இருந்து தப்பி ஓடிக் கொண்டிருந்தேன். பயந்து போயிருந்தேன். அது என்னைத் தாக்கியது. என் தோளில் காயம் ஏற்படுத்தியிருந்தது. காட்டில் இருந்த திறந்த வெளி, மணிகள், எல்லாமே உண்மைதான். என் இரவு உடையின் அழுக்கு, செருப்பில் இருந்த சேறு என என் மனதில் ஓடிக் கொண்டிருந்தவை எல்லாமே என் கற்பனையையும் தாண்டிய உண்மைதான் என்று எனக்கு உறுதிப்படுத்திக் கொண்டிருந்தன.

இது நிச்சயமாக பைத்தியக்காரத் தனம்தான். ஆனால் அது உண்மை. என் தோளில் இரத்தம் வடிந்து கொண்டிருந்த அந்த இடத்தில் இப்போது வெளிர் சிவப்பு நிறத்தில் இருந்த அந்தக் கோடு எந்த அளவுக்கு உண்மையோ அந்த அளவுக்கு உண்மை. அப்படியானால், ஆட்ரியனும் உண்மை! இதையெல்லாம் சரியாகப் புரிந்துகொள்ள அவன் இப்போது என் அருகில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தேன். குறைந்தபட்சம் நான் பைத்தியம் இல்லை என்றாவது அவன் என்னிடம் சொன்னால் நன்றாக இருக்கும். நான் விரும்பியது எனக்குக் கிடைத்துவிட்டது. நான் வீட்டுக்கு வர வேண்டும் என்று ஆசைப்பட்டேன். இதோ வீட்டில் இருக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை அந்த விலங்கும் போய்விட்டது.

ஆட்ரியனை மீண்டும் சந்திக்க வழி இருந்தால் நன்றாக இருக்கும் என்று என் மனதுக்குள் ஆசை வந்தது. நான் தொலைந்து போயிருந்தபோது என்னைத் தேடி வந்ததற்காக, என் தோளில் இருந்த காயத்தை ஆறச் செய்ததற்காக அவனுக்கு

நன்றி சொல்ல வேண்டும். இங்கே என் அறையின் பாதுகாப்பில், மதிய வெயிலின் பிரகாசத்தில், இவை எல்லாம் ஒரு மகிழ்ச்சியான அனுபவங்கள் என்று என்னால் சொல்ல முடியும். என்னில் ஒரு பகுதி அந்த அனுபவங்களுக்காக ஏங்கிக் கொண்டுதான் இருந்தது.

டிஜிட்டல் கடிகாரம் ‘பளிச்’ என்று கண்ணைக் கவர நான் கிளம்புவது நல்லது என்று நினைத்தேன். என் முதுகுக்குக் கீழே படுக்கையில் என் இரவு உடை இரத்தக் கறைகளுடன் என்னை அழுத்திக் கொண்டு இருந்தது. அதை உதறி வெளியே எடுத்தேன். அது ‘பளிச்’ என்று எல்லாவற்றையும் காட்டிக் கொடுத்துவிடக் கூடாதே என்று நினைத்துக் கொண்டேன். அதிலிருந்து அழுக்குத் துணுக்குகள் தரையில் உதிர்ந்தன. ஆட்ரியனின் வார்த்தைகள் சட்டென நினைவில் எதிரொலித்தன, “இத நினைவுச் சின்னமா வச்சிக்கப் போறியா?” நான் புன்சிரித்துக் கொண்டேன். அவனது விளையாட்டுத்தனமும், மயக்கும் புன்னகையும் என் நினைவில் வந்து சென்றன. அவைகளை எல்லாம் இப்போதைக்கு உதறித் தள்ளிவிட்டு நான் உடை மாற்றிக் கொண்டு வேலைக்குப் போக வேண்டும். மூலையில் இருந்த அழுக்குத் துணிக்கூடையை நோக்கி என் இரவு உடையை குறிபார்த்து வீசினேன். ஆனால் குறி தவறித் தரையில் விழுந்தது அந்தத் துணி. தரையைத் தொட்ட துணி ‘டங்’ என்று சத்தமிட்டது. ஒரு துணியில் இருந்து இப்படிச் சத்தம் வருமா? ம்.... என் பாக்கெட் கத்தி. நான் சட்டென்று போய் அதைக் குனிந்து எடுத்தேன். என் மேசையில் வைத்தேன்.

யூனிஃபார்ம் டி-சட்டையை மாட்டிக் கொண்டேன். இந்த வருடம் கால் சட்டையாக நான் மாற்றியிருந்த கடந்த வருடத்து ஜீன்ஸ் பேண்ட்-ஐ மாட்டிக் கொண்டேன். இன்றைய பாதிப்பைக் கணக்கிட கண்ணாடிக்கு முன்பாகப் போய் நின்றேன். வெளிறிப் போய் இருந்தேன். கண்கள் கலங்கிப்போய் சிவப்பு வேர்கள்போல நரம்புகள் தெரிந்தன. என் தலைமுடியைச் சீவி, பின்னாக முடிந்து போனி டெய்ல்-ஆக மாற்றியபோது, ஒரு சின்ன இலை தரையில் மிதந்து போய் விழுந்தது. குனிந்து அதை எடுத்தபோது என் கழுத்திலிருந்த டாலர் என் முகத்தை முத்தமிட்டது. அது என் கழுத்தில் இருப்பதே எனக்கு மறந்து போயிருந்தது. என் தலை வாரும் பிரஷ்ஷை மேசையில் வைத்தபோது அருகில் இருந்த என் பாக்கட் கத்தி மிகவும் சிறியதாகத் தெரிந்தது. அது ஒன்றும் பயங்காட்டும் ஒரு கருவியாகவோ ஆயுதமாகவோ தெரியவில்லை. ஆனாலும் நான் அதை என்னுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்று தோன்றியது. பயன்படலாம். என்னவெல்லாம் நடக்க சாத்தியங்கள் இருக்கின்றன என்று ஒரு காலத்தில் நான் நினைத்திருந்தவைகள் எல்லாமே கடந்த 24 மணி நேரத்தில் தலைகீழாக மாறிப் போயிருந்தன. நான் சாதாரணமான வாழ்க்கைக்குத்தான்



ஆயத்தமாக இருக்க வேண்டும். ஆனால் தாறுமாறாக எதுவும் நடந்தாலும் என்னை இன்னும் ஆயத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். என் வலது கால்சட்டைப் பையில் அதை ஆழமாகத் திணித்தேன். என்னை ஒட்டியபடி அது இருக்க வேண்டும் என்று விரும்பினேன்.

நான் அவசரமாக வெளியே செல்லும்போதுதான் என் கால்களில் இரவு உடையின் சட்டையைத் தரையில் விட்டுச் செல்வது தெரிந்தது. அதை நான் இங்கேயே விட்டுப் போக முடியாது. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் விளக்கம் சொல்வது ரொம்பவும் கடினமானதாக இருக்கும். நேற்று இரவு நடந்தவற்றின் ஆதாரங்களை எல்லாம் பத்திரமாக ஒளித்து வைக்க வேண்டும். நேரம் கண்டுபிடித்து அவைகளை எல்லாம் ஒழித்துப் போட வேண்டும். இப்போதைக்குக் கட்டிலுக்குக் கீழே இவைகளைப் போட்டுவிட வேண்டியதுதான். கட்டிலுக்குக் கீழே என்று நினைத்தபோதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. என் பூனையை எங்கே?

“ரஸ்ட்டி....?” நான் நான்கு கால்களில் நின்று கொண்டு கட்டிலுக்கு அடியில் துணிகளைத் துளாவி, கை எட்டும் அளவுக்கு உள்ளே தடவிப் பார்த்தேன். ரஸ்ட்டியின் தங்க நிறக் கண்களில் வெளிச்சம் எதிரொளித்தது. அது இருக்கும் இடத்தைக் காட்டியது.

“ம்... என்னோட பூனக்குட்டி, இங்கதான் இருக்கியா? வா, வா இங்க.. வா” என் நீட்டப்பட்ட கைகளை நோக்கி அது தயங்கியபடியே வந்தது. தூக்கி எடுத்து என் தோளில் ஒரு குழந்தையைப்போல போட்டுக் கொண்டேன். அது தன் கண்களை அறை முழுவதிலும் அலைய விட்டு, அதை நடுநடுங்க வைத்த காரணம் என்ன என்பதைத் தேடிப் பார்ப்பதுபோலத் தோன்றியது.

“சாரிடா ரஸ்ட்டி. நடந்தது எல்லாமே உன்ன பயங்காட்டியிருக்கும்னு நினைக்கி றேன். ஒக்கே டா. இப்போ நாம நல்லாத்தான இருக்கோம். இனிமேலுக்கு நமக்கு இப்படி பயங்கரமான கனவு எல்லாம் வராது. இப்போ நான் உன்ன கீழே தூக்கிட்டுப் போறேன். நான் போறதுக்குள்ள உனக்கு சாப்பிடறதுக்கு ஏதாச்சும் கிடைக்குதான்னு பாத்து உன்ன சாப்பிட வச்சிட்டுத்தான் அடுத்த வேல.”

நான் இரண்டு அடிகள்தான் எடுத்து வைத்திருப்பேன். அதற்குள் ரஸ்ட்டி பதறியடித்துக் கொண்டு, தரையில் குதித்து, கட்டிலுக்குக் கீழே ஓடி, ஒளிந்து கொண்டது. பாவம் அதுவும் என்னைப்போலத்தானே, அரண்டுபோய் இருக்கிறது. அந்த விலங்கு இனியும் வராது என்று தெரிந்த பின் அவன் சரியாகிவிடுவான் என்று நினைத்தபடியே படிகளில் இறங்கத் துவங்கினேன்.

நேராகப் பாத்ரூமுக்குப் போனேன். அதிரடி இரட்டையர்கள் யாருமே அங்கே இல்லை.





இரண்டு நாட்களாகத் தொடர்ச்சியாக எனக்கு பாத்ரூம் போட்டியில்லாமல், தடையில்லாமல் கிடைத்திருக்கின்றது. இது உலக சாதனைதான். பல்லைத் துலக்கினேன். கண்ணுக்கு ரெண்டு சொட்டு மருந்து ஊற்றினேன். வெளிறிப்போன முகத்தைச் சிறிது ஃபவுண்டேஷன் போட்டு சமாளித்தேன். நான் இப்போது ஆயத்தம் வெளியே போக. வீட்டுக்கு வெளியே மெதுவாக எட்டிப் பார்த்தேன். எப்போதும் இல்லாத ஒரு அமைதி வெளியே. உள்ளே என் தம்பிகள் இருவரும் அங்கும் இங்குமாக ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு ஓடியாடி சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

தயங்கித் தயங்கி சமையலறையை நோக்கிப் போனேன். நேரம் காலை 10:50. அம்மா பேக்கன், ரொட்டித் துண்டு, முட்டை இவற்றையெல்லாம் ஒரு தட்டில் வைத்து மேசையில் வைத்திருந்தார்கள். எனக்குச் சாப்பிடும் மனம் இல்லை. தட்டுக்கு அருகில் கையால் எழுதப்பட்ட ஒரு துண்டுத் தாள் இருந்தது. ஐந்தாம் வகுப்பில் இருந்தே நான் அந்தத் தாள் இருந்த நோட்டுப் புத்தகத்தை வைத்திருக்கிறேன். அம்மா எதையும் எளிதில் வெளியே போட்டுவிடமாட்டார்.

அனா,

டாட்டா சொல்லிட்டுப் போலாம்னு காத்திருந்தேன். ஆனா பசங்க காட்டுத்தனமா சேட்ட பண்ண ஆரம்பிச்சிட்டானுங்க. கேம்ப் போறதுக்கு அவனுங்களுக்கு சில திங்க்ஸ் வாங்கணும், வெளில போறேன். நீயும் ரெடியாகிக்கோ, வியாழக்கிழம கேம்ப் போறதுக்கு. சாப்ட்டுட்டுப் போ. வேலைக்கு லேட்டாப் போகாத. சீக்கிரம் வீட்டுக்கு வந்திரு.

நைட் நம்ம பீட்சா சாப்பிட வெளில போறோம், வர்றியா?

அன்புடன்,
அம்மா.

அம்மாவுக்குப் பின்னந்தலையில் கண்கள் இருப்பது மட்டுமல்ல. நான் மனதில் என்ன நினைக்கிறேன் என்பதில் பாதியைக் கண்டுபிடித்துவிடும் திறமையும் அம்மாவுக்கு உண்டு. தட்டில் இருந்தவைகளை ஒரு வழியாக அடுக்கி வாய்க்குள் திணித்தேன். சாப்பிட வேண்டும் என்ற என் முடிவை என் வயிறு ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. ஆனால் சாப்பிடத் துவங்கிய பின் ஏதோ நன்றாக இருந்ததுபோல இருந்தது. பின்னர் கொலைப்பசியை சமாதானப்படுத்த அதிரடியாகச் சாப்பிட்டு முடித்தேன். விழுங்கினேன். அதிகம் மென்று தின்ன நேரமும் இல்லை, பொறுமையும் இல்லை. நான் எத்தனை பசியுடன் இருந்திருக்கிறேன் என்பது இப்போதுதான் தெரிந்தது. அம்மாவின் குறிப்புக்குக் கீழே நான் கிறுக்கிறேன்;

நோ தேங்க்ஸ்மா. இன்னிக்கு நைட் நான் ஃப்ரண்ட்ஸ் கூட வெளில போறேன்.

அனா.

எனக்கு எந்தத் திட்டமும் இல்லை. முடிந்தால் வெளியே போக வேண்டும் அல்லது வீட்டுக்கு வந்து தனியே இருக்க



வேண்டும் என்றுதான் நினைத்தேன். இப்போதைக்கு அமைதியான சூழ்நிலை எனக்குக் கிடைக்கவே இல்லை. அதனால் முடிந்தபோது, கிடைக்கும்போது அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நேத்தன் எப்படியும் என்னுடன் வருவான் என்ற நம்பிக்கையும் எனக்கு இருந்தது.

நான் என் பர்ஸைத் தோளில் தொங்கப் போட்டுக் கொண்டேன். காயம் ஆறிவிட்டதற்காக நான் சந்தோஷப்பட்டேன். இன்று செவ்வாய்க்கிழமை, இன்னும் முழுதாக ஒரு நாள் இருக்கிறது, கேம்ப்புக்கு ஆயத்தமாக, துணிகளையும் பொருட்களையும் அடுக்கி வைக்க. வருடந்தோறும் நடக்கும் எங்கள் குடும்பத்து கேம்ப்-ஐ நான் அதிகம் விரும்பி எதிர்பார்த்து இருந்த காலம் உண்டு. நான்கு நாட்கள் குளத்தில் நீச்சல், மலை ஏறுதல், படகு ஓட்டுதல், நெருப்பில் உணவு சுட்டு சாப்பிடுதல் இவை எல்லாம் இப்போது இருப்பதைவிட அந்தக் காலத்தில் என்னை அதிகமாகக் கவர்ந்திருந்தன.

நான் வெளிக்கதவின் கைப்பிடியைத் திருகினேன்.

"அனா."

என் இதயம் தொண்டைக்குள் துள்ளி வந்ததுபோல இருந்தது. சட்டென்று அங்கிருந்த நாற்காலியை நோக்கி ஓடினேன். அப்பா வழக்கம்போல அந்த கடமுடா ஈசி சேரில் உட்கார்ந்திருந்து பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தார். கண்ணாடிக்கு மேலாகத் தன் கண்களைத் தூக்கி என்னைப் பார்த்தார்.

"அப்பா, ரெண்டு செகண்ட் நான் பயந்தே போய்ட்டேன். இப்படி சட்டுனு எதிர்பாக்காத மாரி கத்தி பயம் காட்டாதீங்க," என்னைப் பயமுறுத்த வேண்டும் என்றே சதித்திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றனவோ என்று நினைக்கத் தோன்றியது.

"சாரிம்மா. வியாழக்கிழம கேம்ப்க்கு போகணும். ஞாபகம் இருக்கா? போறதுக்கு உனக்கு ஆசயா இருக்கா?"

"ம். கண்டிப்பா" மற்றவர்கள் உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடாது என்று சொல்வது பொய் என்று கணக்கில் வருமா?

"சூப்பர். நானும் எப்படா கேம்ப்புக்குப் போலாம்னுதான் காத்துட்டு இருக்கேன். நீயும் வளந்துட்டு இருக்கிறே. இதெல்லாம் உனக்கு இப்போ இன்ட்ரஸ்டிங்கா இருக்குமான்னு தெரியல. ஆனா இந்த மாதிரி குடும்பமா நாம ஒண்ணா நேரம் செலவழிக்கிறது ரொம்ப நல்லதும்மா. நீயும் இப்போ ரொம்ப பிசியா ஆயிட்டு வர்ற. நாம உக்காந்து உருப்படியா மனசு விட்டு பேசி ரொம்ப காலம் ஆயிருச்சு."

"ஆமாப்பா. நானும் அப்படித்தான் ஃபீல் பண்ணுனேன். கண்டிப்பா கேம்ப் ஜாலியாத்தான் இருக்கும்ப்பா. இப்போ நான் லேட்டா போயிட்டு இருக்கேன். அப்புறம்

பேசலாமா? ராண்டல் அங்கிள் அம்மாட்ட சொன்னா அம்மா என்ன வறுத்து எடுத்துருவாங்க.''

என் காலில் ஒன்று வாசலுக்கு வெளியே போகும்போதுதான் அப்பாவுக்கு முக்கியமான ஒன்றை என்னிடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

"அப்ப சரி. போ. அனா, உன்னோட புது பாக்கட் கத்திய மறந்துறாத. கேம்புக்கு அதையும் கொண்டு வா. நான் உனக்கு மீன் செதில் செதுக்குறது எப்படின்னு கத்துத் தர்றேன்.''

"கண்டிப்பாப்பா. நான் மறக்க மாட்டேன்'' நான் என் கால்சட்டையின் வலது பக்கத்துப் பையைத் தட்டிப் பார்த்துக் கொண்டேன். பாதுகாப்பாக இருப்பதாக ஒரு உணர்வு ஏற்பட்டது. "சூப்பர்ப்பா, டாட்டா.''

நான் ஓட்டமும் நடையுமாகக் காருக்குப் போனேன். அமைதியான தெருவில் கொஞ்சம் வேகமாகத்தான் காரை ஓட்டினேன். இன்று நேத்தன் எவ்வளவு தாமதமாக வேலைக்கு வருவான் என்று மனதிலேயே கணக்குப் போட்டுக் கொண்டேன். எல்லாவற்றையும் பற்றி அவனிடம் பேச வேண்டும் என்று விரும்பினேன். ஆனால் நான் ஆட்ரியனை இந்த அளவுக்கு நம்புவதை அவன் ஒத்துக்கொள்ள மாட்டான் என்றுதான் நினைத்தேன். ஆனால் நேத்தன் லாமாராவுடன் சுற்றிக்கொண்டு, என்னைத் தட்டிக் கேட்க அவனுக்கு உரிமை இல்லை என்று உறுதியாக மனதில் பேசிக் கொண்டேன். அவன் பரிசாகக் கொடுத்த கத்தி எப்படி அந்த விலங்கிடம் இருந்து என் உயிரைக் காப்பாற்றியது என்பதை அவனிடம் சொல்லிவிட வேண்டும் என்ற ஆசைதான் மனதில் அதிகமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்தக் கத்தியை நான் அதிகம் விரும்பத் துவங்கியிருக்கிறேன் என்றாவது அவனிடம் சொல்ல வேண்டும். இனிமேல் அந்தக் கத்தியை விட்டு நான் பிரியவே மாட்டேன் என்று செய்த முடிவையும் அவனிடம் சொல்லிவிட அவசரப்பட்டேன்.

கர்லி தெருவில் ஒரு சிக்னலைத் தவிர்க்க வலதுபுறம் திரும்பினேன். அது நிச்சயமாக எனக்கு நேரத்தை மிச்சப்படுத்தித் தரும். ஆனால் எனக்கும் நான் வேலைக்குப் போகும் இடத்துக்கும் நடுவில் இன்னும் ஒரு சிக்னல் இருக்கிறது. அதை நான் தவிர்க்க முடியாது. நான் குறுக்கு வழியில் போனபோது எனக்குப் பிடித்தமான எங்கள் ஊர் சின்ன மலை என் கண்களுக்கு முன்பாக அழகாகக் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. அங்கே பசுமையான பைன் மரங்களுக்கு நடுவில் இருந்து வீசும் குளிர்ந்த காற்று எந்தச் சூழ்நிலையையும் மாற்றக் கூடியது. அந்தக் காட்டுக்குள் நான் அடிக்கடி காணாமல் போய்விடுவேன். அந்த அனுபவத்தை அதிகம் மகிழ்ச்சியுடன்





அனுபவித்திருக்கிறேன். ஆனால் நேற்று இரவு நடந்த அனுபவம் என் சிந்தனையைத் தலைகீழாக மாற்றியிருந்தது. காடு என்றாலேயே துரத்தப்பட்டு தாக்கப்படுதல், பின்பு காப்பாற்றப்படுதல் என்ற சிந்தனை. காப்பாற்றிய ஆட்ரியனைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவல் எனக்குள் இன்னும் அதிகமாகப் பெருகிக்கொண்டே இருந்தது. அந்த நினைவுகள் அழிக்கவே முடியாத களைகளைப்போல எனக்குள் வளர்ந்து கொண்டேதான் இருந்தன. இப்படிப்பட்ட நடக்கவே நடக்காது என்ற நினைவுகளை என்ன செய்ய வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லையே!

சிக்னலில் விளக்கு பச்சையானது. நான் மலையை நோக்கியிருந்த தெருவிலிருந்து என் வேலைக்குச் செல்லும் தெருவை நோக்கி காரை மெதுவாக நகர்த்தினேன்.

காரில் இருந்து இறங்குவதற்கு முன்பாக நான் என் கண்களை மூடினேன். ஆட்ரியனின் முகத்தைக் கண்களுக்குள் கொண்டு வந்தேன். அவனைப் பார்க்க எனக்கு வாய்ப்பு இருக்குமா? என்று யோசித்துப் பார்த்தேன். அவனால் வர முடிந்தால் நிச்சயமாக இங்கே வருவான் என்று நினைத்தேன். அவன் சொன்னதை வைத்துப் பார்த்தால் அவன் இங்கு வருவது என்பது நடக்காத ஒன்று. போஸ்டரினிஸில் உள்ள யாரும் வாசலைத் திறக்க முடியாது. அது உண்மை என்றால் நான் எப்படி அங்கே இருந்து இங்கே வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்? அவன் சொன்னது உண்மையாக இல்லாமல் இருந்து, அவன் இங்கு வர முடியும் என்றால் எப்படி இருக்கும்? அவனுடன் இன்னும் சிறிது நேரம் இருந்திருக்கலாமோ என்று எனக்குத் தோன்றியது. வாழ்க்கையில் ஒரு முறைதான் அரசனாகப் போகின்ற ஒருவனை நாம் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும்.

என் காரில் இருந்த ரேடியோவில் ஒரு கடிகாரம் இருந்தது. அது மணி 11.01 என்றது. ராண்டல் என்னைத் தேடி ஆட்களை அனுப்புவதற்கு முன் நான் கடைக்குப் போய்விடுவது நல்லது. ரேயும் ஹேய்டனும் என் சாகசப் பயணத்தைப் பற்றிக் கேள்விப்பட்டால் நிச்சயமாக என்னைக் கிண்டல் செய்வார்கள். எல்லாவற்றையும் எழுதி வைத்து, அது கதை என்று நடிக்க வேண்டியதுதான்.

*Editorial Team :* ***Jeswyn, Jesudoss, Prem, Wilbert & Mic Yell***
*Design :* ***Jeba Prakash*** *Pages :* ***34***
***For free PDF*** *copy Please Contact :* **kurutholaimag@gmail.com**
*Facebook :* ***@kurutholai*** *For More Details :* **9442269002**
**எழுத்தாளர்களின் அனுமதியுடன் படைப்புகள் வெளியிடப்படுகின்றன**